Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை 30 | செய்தி: 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :190 வைகாசி 24ஆம் நாள் சனிக்கிழமை 06 ஜூன் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

கொரோனாவிலிருந்து எம்மை நாமே பாதுகாப்போம்



21

கொவிட்-19 எனப்படும் கொரோனா வைரஸ் நோயானது அதிகளவு மரணத்தை ஏற்படுத்தக்கூடியதுடன் மிக வேகமாகப் பரவும் ஒரு நோயாகும்.

தகவல்: வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம்

# ஊரடங்கு நேரத்தில் மாற்றம்

கொழும்பு, ஜூன் 6
இன்று முதல் நாட்டில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வுள்ள நேரத்தில் மாற்றம் செய்யப் பட்டுள்ளது. இரவு 11 முதல் மறுநாள் அதிகாலை 4 மணிவரை ஊரடங் குச் சட்டம் நடைமுறையில் இருக் கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மறுஅறிவித்தல்வரை இந்த நடை முறை இருக்கும் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இதுவரை இரவு 10 மணி 02

## துப்பாக்கி சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 6
மொனராகலை, இந்தேகட்டுவவில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஒருவர் உயிரிழந் துள் 13

## சீனியின் விலை 135 ரூபாவே

யாழ்ப்பாணம், ஜூன் 6
ஒரு கிலோ சீனி 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படும் தகவலில் உண்மையில்லை என்று மறுத்துள்ள யாழ்ப்பாண நகர வர்த்தகர்கள் சீனியின் அதிக பட்ச வில 02

## கொரோனா நேற்று நால்வர் மொத்தம் 1,801

கொழும்பு, ஜூன் 6
கொரோனாத் தொற்றுக்குள்ளான 4 பேர் நேற்று இனங்காணப்பட்டதை அடுத்து, நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 801 ஆக அதிகரித்துள்ளது.
கொரோனாத் தொற்றுக்குள்ளான 858 ஆபர 02

## சிமெந்து விலை கூடும்!

கொழும்பு, ஜூன் 6
சிமெந்து மீதான செஸ் வரியை அதிகரிக்கும் அரசின் தீர்மானத்தால் சிமெந்து பொதியின் 02

# ராஜபக்சவினரின் ஆயுதம் இனவாதம்

### கடுமையாக சாடுகின்றார் ரணில்



கொழும்பு, ஜூன் 6
நல்லாட்சியில் இந்த நாடு இன நல்லிணக்கத்துக்கும் மத நல்லிணக்கத்துக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக இருந்தது. ஆனால் தற்போது ராஜபக்சக்களின் ஆட்சியில் இந்த நாடு இனவாதத்தாலும், மதவாதத்தாலும் சீரழிந்துள்ளது. தேர்தல் வெற்றிக்காக ராஜபக்சவினர் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதெல்லாவற்றையும் அரங்கேற்றி வருகின்றனர். 02

## பதில் அரச இரசாயன பகுப்பாய்வாளர் கௌரி ரமனா

கொழும்பு, ஜூன் 6
பதில் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளராக, அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாயர் திணைக்களத்தின் மேலதிக அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் கௌரி ரமணா நியமிக் கப்பட்டுள் 02

## குப்பைக்கு வைத்த தீயால் பயன்தரு மரங்கள் நாசம்!



கொடிகாமம், ஜூன் 6
தென்மராட்சி, மந்துவிலில் குப்பைக்குவைத்த தீ அருகில் இருந்த பனை, தென்னை மரங்களில் பற்றிக் கொண்டதில் அவை எரிந்து நாசமாகின. இந்தச் சம்பவம் நேற்று இரவு 7 மணியளவில் சின்னச்சந் தைப் பகுதி 13

## இராஜதந்திரிகளுக்கு அரசு "கிடுக்கிப்பிடி"

கொழும்பு, ஜூன் 6
வெளிநாட்டு இராஜதந்திரப் பணியாளர்கள் நாட்டுக்குள் வரும்போது கடைப்பிடிக்க வேண்டிய தனிமைப்படுத்தல் நடைமுறைகள் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் தொடர்பான திருத்தப்பட்ட நடைமுறைகளை அரசு அறிவித்துள்ளது.
சில நாள்களுக்கு இலங்கைக்கு வந்த 02

## ஓடு பிரித்து நகை திருடியோர் இரு மணி நேரத்தில் சிக்கினர்

### ஏழாலை மேற்கில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 6
ஏழாலை மேற்கில் வீடொன்றில் நகைகள் திருடப்பட்ட நிலையில், இரண்டு மணி நேரத்தில் அவை பொலிஸாரால் மீட்கப்பட்டன. சந்தேகநபர்கள் இருவர் பொலிஸாரால் 02

## பலநாள் திருடர்கள் முல்லையில் சிக்கினர்

முல்லைத்தீவு, ஜூன் 6
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் நீண்டகாலமாகத் திருட்டில் ஈடுபட்டு வந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர். 02

## இராணுவ ஆட்சி என்றால் மக்களே நிராகரிப்பார்கள்

### ரம்புக்வெல தெனாவட்டு

கொழும்பு, ஜூன் 6
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு இராணுவ ஆட்சிதான் நடத்துகின்றது என்றால் பொதுத் தேர்தலில் மக்கள் பதில் வழங்கட்டும் 13

## யாருக்கு அதிகாரம் என்பது மக்கள் எடுக்கும் முடிவே

### எஸ்.பி. திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 6
யாரிடம் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள். ஐக்கிய தேசியக் கட்சியினரும், ஐக்கிய மக்கள் சக்தியினரும் அரசியல் ரீதியில் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளார்கள். 02

## தமிழ், முஸ்லிம் மக்கள் ஆதரவு கிடைக்குமாம்!

### பெரமுனவின் தவிசாளர் பீரிஸ் நம்புகின்றார்

கொழும்பு, ஜூன் 6
தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவு எதிர்வரும் பொதுத் தேர்தலில் நிச்சயம் கிடைக்கும் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் 02

## இந்தியாவிலிருந்து இருவரை அழைத்து வந்தவர்கள் கைது



மன்னார், ஜூன் 6
இந்தியாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் கடல்வழியாகப் படகு மூலம் தலைமன்னா 13

## 5,000 பேர் இன்னமும் கண்காணிப்புக்குள்

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

02

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஊரடங்கு...

யில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் தற்போது 11 மணிக்குப் பின்நகர்த்தப்பட்டுள்ளது. அதேவேளை கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதிக்குப் பின்னர் முதன்முறையாக நாளை ஞாயிற்றுக்கிழமை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படவுள்ளது. ஞாயிற்றுக்கிழமை ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப் படுவது தொடர்பாக ஜனாதிபதி ஊடகப் பிரிவில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

அதேவேளை, கொழும்பு, கம்பஹா மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச, தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களை நடத்திச் செல்லும் போதும், அன்றாட இயல்பு வாழ்க்கையின்போதும் கொரோனா ஒழிப்பு சுகாதார பரிந்துரைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-22)

## சீனியின்...

லறை விலை 135 ரூபாவே என்று தெரிவித்துள்ளனர்.

சீனிக்கான கட்டுப்பாட்டு விலை இரண்டு மாதங்களுக்கு முன்னர் நீக்கப்பட்டது. அதேவேளை ஒரு கிலோ சீனிக்கான சுங்கவரி 35 ரூபாவிலிருந்து 50 ரூபாவாக அண்மையில் அதிகரிக்கப்பட்டது. அதையடுத்து நாடு முழுவதும் சீனியின் விலை அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சில்லறை விலையாக 135 ரூபாவுக்குப் போதியளவு சீனியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ்ப்பாண வணிகர் சங்க உப தலைவர் இ.ஜெயசேகரன் தெரிவித்தார். (ஒ.ப)

## பதில்...

ளார். அதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமையவே கௌரி ரமணா பதில் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளராகக் கடமையாற்றிய ஏ.வெலிஅங்க, நேற்று வெள்ளிக்கிழமை 60 வயதை நிறைவு செய்து ஓய்வு பெற்றார். அதையடுத்தே கௌரி ரமணா நியமிக்கப்பட்டுள்ளார். (எ)

## ராஜபக்சவினரின்...

இவ்வாறு கடும் சீற்றத்துடன் தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. நேற்றுத் தன்னைச் சந்தித்த கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனவாதத்தையும் மதவாதத்தையும் வேரூன்றச் செய்து அதனூடாக பௌத்த சிங்கள மக்கள் அனைவரையும் தமது பக்கம் இழுப்பதே ராஜபக்சக்களின் குறிக்கோளாக இருக்கின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் இனவாதத்தையும் மதவாதத்தையும் முன்னிலைப்படுத்தியே வாக்குகளை ராஜபக்சவினர் பெற்றனர். அதைவிட மோசமான வழியில் நாடாளுமன்றத் தேர்தலிலும் வாக்குகளைப் பெறுவதற்காக ராஜபக்சவினர் முயற்சிக்கின்றனர்.

எனினும், நாட்டு மக்கள் விழிப்பாக இருப்பார்கள் என்றே நான் நம்புகின்றேன். குடும்ப ஆட்சிக்கும் எதேச்சதிகார ஆட்சிக்கும் மக்கள் இனிமேல் இடம் கொடுக்க மாட்டார்கள். ஒரு நாட்டின் பாதுகாப்புத் துறையின் சிகரங்களாக படையினர் இருக்கின்றார்கள். அவர்களையும் தமது அரசியலுக்குள் உட்புகுத்தி பாதுகாப்புத் துறையின் கௌரவத்தையும் இந்த அரசு குறைத்துள்ளது. இவற்றுக்கெல்லாம் பொதுத்தேர்தலில் மக்கள் பதில் வழங்கியே தீருவார்கள் -என்றார். (எ-22)

## இராஜதந்திரிகளுக்கு...

அமெரிக்கா இராஜதந்திர ஒருவர் விமான நிலையில் பி.சி.ஆர். பரிசோனைக்கு இணங்கவில்லை என்ற தகவல்கள் வெளியாகியிருந்தன. அது சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளுக்கு ஏற்பவே அமெரிக்க இராஜதந்திரி பி.சி.ஆர். சோதனையை மறுத்திருந்தார் என்று இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் தெரிவித்திருந்தார். இந்நிலையில் அரசு இராஜதந்திரப் பணியாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய திருத்தப்பட்ட தனிமைப்படுத்தல் நடைமுறைகளை அறிவித்துள்ளது.

திருத்தப்பட்ட வழிகாட்டுதல்கள் தொடர்பாக அனைத்து இராஜதந்திரப் பணிகள், ஐக்கிய நாடுகளின் பிரதிநிதி அலுவலகம், அதனுடன் இணைந்த முகவர் நிலையங்கள், சர்வதேச அமைப்புக்கள், இலங்கைத் துணைத் தூதரங்கள் ஆகியனவற்றுக்கு அறிவிக்க வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராஜதந்திர தூதரக உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் எழுத்துமூலமாக வெளிவிவகார அமைச்சுக்கு வந்து முன்கூட்டியே ஒப்புதல் பெற வேண்டும்.

இராஜதந்திரிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் இலங்கை வருவதற்கு 72 மணி நேரத்துக்கு முன்னதாகத் தமது நாட்டில் பெறப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையை விமான நிலையத்தில் கையளிக்க வேண்டும்.

இராஜதந்திரிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் பி.சி.ஆர். ஆய்வு அறிக்கைகளைச் சமர்ப்பிக்க முடியாவிட்டால், அவர்கள் விமான நிலையத்தில் கட்டாய பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

தூதரகத் தலைவர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அவர்களின் உத்தியோகபூர்வ வீடுகளில் சுய தனிமைப்படுத்தப்பட வேண்டும். ஏனைய அனைத்து இராஜதந்திர ஊழியர்களும், அவர்களது குடும்ப உறுப்பினர்களும் இலங்கை அரசு பரிந்துரைக்கும் ஹோட்டல்களில் தனிப்படுத்தல் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

14 நாள்கள் தனிமைப்படுத்தல் முடிந்தவுடன் வெளியுறவு அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும். அவர் பணியைத் தொடங்க முன்னர் தூதரகம் மேற்கொண்ட இரண்டாவது பி.சி.ஆர் பரிசோனை அறிக்கையை வெளியுறவு அமைச்சுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

தூதரக ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் பிரயாண விவரங்களை அவர்கள் புறப்படுவதற்குக் குறைந்தபட்சம் 48 மணி நேரத்துக்கு முன்னதாக அமைச்சின் உபசரணைப் பிரிவின் தலைவருக்கு இராஜதந்திரத் தூதரகங்கள், பணிமனைகள் அனுப்ப வேண்டும்.

இந்த நடவடிக்கைகள் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டன.

இலங்கை அரசு வெளியிட்டுள்ள இந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கான அவர்களது அங்கீகாரத்துக்கு உட்பட்ட வகையில் இராஜதந்திர அதிகாரிகள் இலங்கைக்குப் பயணம் செய்ய அங்கீகாரம் அளிக்கப்படும் என்று வெளிநாட்டு உறவுகள் அமைச்சு குறிப்பிடுகின்றது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஓடு...

கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏழாலை மேற்கு, சைவ சன்மார்க்க வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள வீடொன்றிலேயே திருட்டு நடந்துள்ளது. நேற்று மதியம் வீட்டில் எவரும் இல்லாத நிலையில் திருடர்கள் ஓடு பிரித்து இறங்கி சுமார் 16 பவுண் நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

வீட்டு உரிமையாளர்கள் வீடு திரும்பிய போது, திருட்டு நடந்திருப்பதை அவதானித்து சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். முறைப்பாட்டை அடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், பாதுகாப்புக் கமராப் பதிவுகளைக் கொண்டு சந்தேக நபர்களைக் கைது செய்தனர். திருடப்பட்ட நகைகளும் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஏழாலை தெற்கு, மயிலங்காட்டைச் சேர்ந்த 16 வயதுடைய சிறுவன் மற்றும் 22 வயதுடைய இளைஞன் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-26,39,105)

## பலநாள்...

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் தண்ணீர் மோட்டர்கள், தொலைக்காட்சிகள், முச்சக்கர வண்டிப் பாகங்கள், ஜன்னல்கள், கதவுகள் போன்ற பொருள்கள் நீண்ட காலமாகத் திருடப்பட்டு வந்தன. வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த உழவியந்திரம் ஒன்றை உயர்த்தி, அதன் நான்கு சக்கரங்கள் திருடப்பட்ட சம்பவமும் நடந்திருந்தது. இது தொடர்பாக முறைப்பாடுகள் செய்யப்பட்டபோதும் எவரும் கைது செய்யப்படவில்லை.

அண்மையில் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர் பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருந்தமை தெரியவந்தது. அதையடுத்து மேலும் இருவர் கைது செய்யப்பட்டதுடன், திருடப்பட்டிருந்த சில பொருள்களும் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் கடந்த முதலாம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர் என்றும், அவர்களை எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-19)

## யாருக்கு...

இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

பொதுத்தேர்தலை நடத்த எதிர்த்தரப்பினர் முன்னெடுத்த சூழ்ச்சிகள் அனைத்தும் தோல்வியடைந்துள்ளன. பொதுத் தேர்தலை எதிர்கொள்வதைத் தவிர அவர்களுக்கு வேறெந்த மாற்று வழிகளும் தற்போது கிடையாது.

பொதுத்தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஒரு கட்சிக்குக் கிடைத்த வெற்றியல்ல. ஒட்டுமொத்த மக்களுக்கும் கிடைத்த வெற்றியாகும்.

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் பொதுத்தேர்தலை நடத்துவது அரசின் நோக்கமல்ல. தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளின்போது சுகாதாரத் தரப்பினரது அறிவுறுத்தல்கள் கடுமையான முறையில் முன்னெடுக்கப்படும்- என்றார். (எ)

## 5,000 பேர்..

கொழும்பு, ஜூன் 6

கொரோனா வைரஸ் தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தில் 5 ஆயிரம் பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் கண்காணிப்புக்குள் உள்ளனர் என்று இராணுவத் தளபதி லெப்டினெட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது 45 தனிமைப்படுத்தல் நிலையங்களில் இவர்கள் கண்காணிக்கப்படுகின்றனர். இதுவரை 11 ஆயிரத்து 709 பேர் தனிமைப்படுத்தப்பட்டுக் கண்காணிக்கப்பட்டுப் பின்னர் வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். நாட்டில் இதுவரை கண்டறியப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களில் 409 பேர் சமூகத்தில் இருந்து அடையாளம் காணப்பட்டனர். 836 பேர் இலங்கைக் கடற்படையில் இனங்காணப்பட்டனர். வெளிநாடுகளில் இருந்து 550க்கும் மேற்பட்டவர்களுக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது- என்றார். (எ)

## தமிழ்...

துள்ளதாவது:

பொதுஜன பெரமுனவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவு முழுமையாகக் கிடைக்கவில்லை என்று கூறமுடியாது. கணிசமான அளவு ஆதரவு கிடைத்துள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில், அந்த அரசின் மீது தமிழ் மக்கள் மத்தியில் தவறான குற்றச்சாட்டுக்கள் மட்டுமே முன்வைக்கப்பட்டன. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் மிகத் துரிதமாக அபிவிருத்தியை முன்னெடுத்தார். தமிழ் அரசியல்வாதிகள் தங்களின் தேவைக்காகப் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து நல்லாட்சி அரசை உருவாக்கினார்கள்.

நல்லாட்சி அரசின் பயனை எவரும் பெற்றுக் கொள்ளவில்லை. முக்கியமாக தமிழ், முஸ்லிம் மக்கள் கடந்த அரசின் காலத்தில் பெரும் நெருக்கடிக்கு உட்படுத்தப்பட்டனர். தேசிய பாதுகாப்பு அரசியல் மயப்பட்டமையால் பெரும் விளைவுகள் நாட்டில் ஏற்பட்டன.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தேசிய பாதுகாப்புக்கு மாத்திரமே முன்னுரிமை வழங்குவார். பொதுத் தேர்தலிலும் தேசிய பாதுகாப்பு, துரித அபிவிருத்தி என்பவற்றுக்கே முக்கியத்துவம் வழங்கப்படும்.

பொதுத் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுன வெற்றிபெறும். தமிழ், முஸ்லிம் மக்கள் இந்தமுறை நிச்சயம் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தலைமையில் பலமான அரசின் பங்குதாரர்கள் ஆவார்கள்- என்றார். (எ-22)

## சிமெந்து...

விலை 150 ரூபாவால் அதிகரிக்கக்கூடும் என்று பாவனையாளர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக சிமெந்து விநியோகத்தில் ஏகபோகத்தை உருவாக்க வாய்ப்புள்ளது என்று பாவனையாளர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார். (க)

## கொரோனா...

முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 932 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர். கொரோனா தொற்றுக்குள்ளாகி 11 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்தது. (எ)



## பொருளாதார மையத்தில் மரக்கன்றுகள் நடுகை

வவுனியா, ஜூன் 6

உலக சுற்றாடல் தினமான நேற்று, வவுனியா மதவுவைத்தகுளம் பகுதியில் அமைக்கப்பட்ட விஷேட பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு நேற்று முற்பகல் 9 மணியளவில் நடைபெற்றது.

வவுனியா மாவட்டத்துக்கான பொருளாதார மத்திய நிலையத்தை வவுனியா மதகு வைத்தகுளத்தில் கட்டுவதற்காக 2016ஆம் ஆண்டு அப்போதிருந்த அரசின் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு 291மில்லியன் ரூபா நிதி ஒதுக்கி கட்டியிருந்தது.

ஆனாலும் அதன் அமைவிடம் தொடர்பில் அன்றைய வவுனியா மாவட்ட அரசியல் தரப்பினரிடையே காணப்பட்ட இழுபறிநிலை காரணமாக கட்டடத்தைப் பயன்பாட்டுக்கு விடமுடியாதமையால் அந்தப் பகுதியில் பற்றைகள் சூழ்ந்து காணப்பட்டன.

இந்த நிலையில், வவுனியா மாவட்ட பொருளாதார மத்திய நிலையத்தை உடனடியாக வர்த்தக நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சரவை கடந்தபுதன்கிழமை அனுமதி வழங்கியிருந்தது.

இந்த நிலையில் பொருளாதார மத்திய நிலையத்தைத் திறப்பதற்குரிய நடவடிக்கையை வவுனியா மாவட்டச் செயலகம் எடுத்துள்ளது.

அதன் முதற்கட்ட நடவடிக்கையாக நேற்றுமுன்தினம் துப்புரவு செய்யப்பட்டிருந்தது. நேற்று மரக்கன்றுகள் நடும் நிகழ்வுகள்நடைபெற்றன.

வவுனியா மாவட்டச் செயலகத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலர் எஸ்.எம்.சமன் பந்துலசேன, மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார், உதவி மாவட்டச்செயலர் கே.சபர்யா, பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் மு.மகேந்திரன், வவுனியா வர்த்தக சங்கச் செயலாளர் ஆறுமுகம் அம்பிகைபாலன், வனப் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள், சிவில் பாதுகாப்பு திணைக்கள அலுவலர்கள், மாவட்டச் செயலக அலுவலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(து-18,110)

# சடலங்கள் வீடுகளில் உள்ள நேரத்தை விட பிரேத அறையில் இருக்கும் நேரமே அதிகம்

## மன்னார் பிரஜைகள் குழு கவலை

கொழும்பு, ஜூன் 6

**மன்னாரில் திடீர் இறப்புகளுக்கு உள்ளாகுவோரின் சடலங்களை வீடுகளில்வைத்து மரியாதை செலுத்துவதைவிட மன்னார் பொது மருத்துவமனை பிரேத அறையில்வைத்து கவலை போக்கும் செயற்பாடே அதிகமாக காணப்படுகிறது என்று மன்னார் பிரஜைகள் குழு மன்னார் பொது மருத்துவமனை அத்தியட்சகர் க.செந்தூர்பதிராஜாவிடம் கவலை தெரிவித்துள்ளது.**

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் நிலவிவரும் குறைபாடுகள் சம்பந்தமாக பொதுமக்கள் மன்னார் மாவட்டப் பிரஜைகள் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர். இந்த விடயம் பற்றி பிரஜைகள் குழுவின் பணிப்பாளர் சபைத் தலைவர் அருட்பணி ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் நேற்றுமுன்தினம் மன்னார் பொது மருத்துவமனை அத்தியட்சகர் க.செந்தூர்பதிராஜாவை சந்தித்து கலந்துரையாடினர். அதன்போதே மேற்கண்ட விடயத்தை குழுவினர் கூறியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் ஏற்படும் திடீர் இறப்புக்கள் யாவும் பிரேத பரிசோதனைக்காக இந்த மருத்துவமனைக்கே கொண்டு வரப்படுகின்றன. பிரேதப் பரிசோதனைக்காக பல மணி நேரம் பிரதேச அறையில் வைத்திருப்பதால் உறவுகள் கவலையடைகின்றன.

உறவினர்களின் சடலங்களை வீடுகளில் வைத்து துக்கம் கொண்டாடும் நேரங்களைவிட மன்னார் மருத்துவமனை பிரேத அறைக்கு முன்னால் இருந்து கதறி அழுது புலம்பும் நேரங்களே அதிகமாகக் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை வெட்டும் ஊழியர் பற்றாக்குறையே என்று குழு சுட்டிக்காட்டியது.

இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துவதாக மருத்துவமனை அத்தியட்சகர் குழுவினரிடம் உறுதியளித்தார்.

(ப-60)

## இலங்கையில் முதலிடுவதற்கு இந்தியா ஆர்வம்

பல துறைகளில் முதலீடு செய்வதற்கு இந்தியா எதிர்பார்த்துள்ளதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.


உணவுப் பாதுகாப்பு, மருந்து மற்றும் விவசாய உற்பத்தி, எரிபொருள் சுத்திகரிப்பு உள்ளடங்கலாக பல துறைகளில் முதலீடு செய்ய இந்திய முதலீட்டாளர்கள்விருப்பம்தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வடக்கில் புதிய தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்துவதற்கும், வர்த்தக நிலையங்களை அமைப்பதற்கும் 25 கோடி ரூபா நிதியுதவியை இந்தியா வழங்கியுள்ளது. இதில் மடு யாத்திரை ஆரம்பமாவதற்கு முன்னர் 144 வீடுகளை அமைக்கும் வேலைத்திட்டத்துக்கு 30 கோடி ரூபா வழங்க இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளது - என்றார்.

(க)

## தொழிலின்போது நட்பாக படகில் பயணிக்கும் கொக்கு

*10 வருடங்களாக தொடர்கிறது என்கிறார் மீனவர்*



வவுனியா நகரில் அமைந்துள்ள குடியிருப்புக் குளத்தில் நன்னீர் மீன்பிடியில் பலர் ஈடுபடுகின்றனர். அவர்களில் ஒருவர்தான் தனிக்கொடி சிவானந்தம் (பாபு). அவர் தொழிலில் ஈடுபட்டுவரும் நிலையில், அவருடன் கூடவே ஒரு கொக்கு படகில் பல வருடங்களாக பயணித்துவருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

"நான் இந்தக் குடியிருப்புக் குளத்தில் இருபது வருடங்களாக மீன்பிடித்துவருகின்றேன். கடந்த பத்து வருடங்களாக இந்தக் கொக்கு என்னுடனேயே தோணியில் பயணிக்கின்றது. குளத்துக்குள்ளே நான் மீன்பிடிக்க இறங்குவதிலிருந்து தொழில் முடிந்து கரைக்கு வரும்வரை என் கூடவே இந்தக்கொக்கு வருகின்றது. இந்தக் கொக்கு வேறு எவருடைய தோணியிலும் போய் அமர்வதில்லை" என்கிறார் சிவானந்தம்.

குளத்தில் மீன்பிடிக்க அவர் தோணியை எடுத்துக்கொண்டு செல்லும் போது, இவரைக் கண்டதும் அந்தக் கொக்கு பறந்துவந்து அவரது தோணியின் முன்பக்கத்தில் அமர்ந்து கொள்கிறது. அந்த மீனவர் போடுகின்ற சின்ன சின்ன மீன்களை உட்டுகொண்டு அவருடனேயே தோணியில் பயணம் செய்கிறது அந்தக் கொக்கு.

அந்தக் குளத்தில் பல மீனவர்கள் தோணியில் மீன்பிடிக்கின்ற போதிலும் எங்கிருந்தோ வருகின்ற ஒரு கொக்கு காலை, மாலை வேளையில் அந்த மீனவரோடு பயணம் செய்வதுதான் அபூர்வமானதாக இருக்கின்றது.

"என்னோடு இந்தக் குடியிருப்புக் குளத்தில் எவ்வளவோ பேர் தோணியில் மீன் பிடிக்கின்றார்கள். நிறையக் கொக்குகள் வருகின்றன. அவர்கள் போடுகின்ற சின்ன மீன்களை உண்டுவிட்டுப்போய்விடும். ஆனால் இந்தக் கொக்கு மட்டும் எனது தோணியில் எப்போதும் இருக்கும். நான் மீன்பிடித்து முடிக்கும் வரை என்னுடனேயே இருந்துவிட்டு நான் கரைக்கு வந்ததும் பறந்து போய் விடும்" என்கிறார் அவர்.

இந்த அதிசயக் கொக்கின் நடத்தையை இங்குள்ளவர்கள் வியப்பாகவே நோக்குகின்றனர். பிராணிகளின் விநோதமான நடத்தைகள் சிலவற்றைப் புரிந்து கொள்ளவே முடியாதுள்ளதாக இங்குள்ளவர்கள் கூறுகின்றனர். பறவைகளுக்கும் மனிதர்களுக்குமான தொடர்பு அன்றையகாலம் தொட்டு இன்று வரை தொடர்ந்து வருவதையே இந்தக்காட்சி புலப்படுத்துகின்றது என்று அவர்கள் கூறுகின்றனர்.

இந்தநிலையில் வவுனியா குடியிருப்புகுளத்தில்தொழில்புரியும்அந்த மீனவருக்கு தொழில்முடியும்வரை வழித்தடமாகவும், துணையாகவும் இருக்கும் கொக்கின் செயற்பாடு எப்பொழுதும் ஆச்சரியமே என்றும் தெரிவிக்கின்றனர்.

(து-110)

# பஸ் நிலையக் கட்டடம் ஞாயிறன்று கையளிப்பு

மன்னார், ஜூன் 6

மன்னாரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பஸ் நிலையக் கட்டடம் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நாளை ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வமாக மன்னார் நகர சபையிடம் கையளிக்கப்படவுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதி ஒதுக்கீட்டின் சுமார் 130 மில்லியன் ரூபா நிதியில் மன்னார் பஸார் பகுதியில் சகல வசதிகளுடன் பஸ் நிலையம் அமைக்கப்பட்டது.

பஸ் நிலையம் நகர சபையிடம் கையளிக்கப்படவுள்ள விடயம் தொடர்பாக மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் நேற்றுமுந்தினம் வியாழக்கிழமை மதியம் மன்னார் நகர சபையில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது. மன்னார் நகர சபையின் செயலாளர், உப தலைவர், உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

மன்னார் நகர சபையிடம் குறித்த பஸ் நிலையம் கையளிக்கப்படும் நிலையில் பிறிதொரு தினத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு புதிய பஸ் நிலையத் திறப்பு விழா நிகழ்வு இடம்பெற ஏற்பாடுகள் செய்வது தொடர்பாக உறுப்பினர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

(ப-56)

# மொட்டு மலர்ந்ததும் ‘19’ க்கு சமாதிதான்!

## முன்னாள் எம்.பி. அபேகுணவர்தன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 6



**பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றதும் அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டம் இரத்துச் செய்யப்படும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரோகித அபேகுண வர்தன தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

" பொதுத்தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை எமது கூட்டணி பெறும். அதற்கான ஆணையை மக்கள் வழங்குவார்கள். அதன்பின்னர் ஆட்சிஅமைக்கப்படும். எந்தவோர் ஆட்சிவந்தாலும் அதனை உரிய வகையில் கொண்டுநடத்துவதற்கு 19ஆவது திருத்தச்சட்டம் பெரும் தடையாக இருக்கின்றது. எனவே, அந்தச் சட்டம் இல்லாதொழிக்கப்படும்.

அடிப்படைவாத கட்சிகளுடன் ஒருபோதும் கூட்டணி அமைக்கமாட்டோம். பங்காளிகளாகவும் இயங்க மாட்டோம் என்பதை பொறுப்புடன் கூறிவைக்க விரும்புகின்றேன்.

அதேவேளை, தொல்பொருள் ஆராய்ச்சி குறித்த ஜனாதிபதி செயலணிக்கு நிபுணத்துவத்தின் அடிப்படையிலேயே உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதில் எவ்வித உள்நோக்கமும் கிடையாது." என்றார். (கு-44)

# ‘ஸ்மாட்’ அலைபேசிகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது

யாழ்ப்பாணம், ஜூன் 6

கொரோனா தாக்கம் காரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் சந்தைகளில் தற்போது ‘ஸ்மாட்’ வகை அலைபேசிகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அலைபேசி விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கொரோனா தாக்கம் ஆரம்பித்த மார்ச் மாதம் சந்தையில் விற்பனை செய்யப்பட்ட சகலவகை அலைபேசிகளும் தற்போது 3 ஆயிரம் ரூபா தொடக்கம் 5 ஆயிரம் ரூபா வரையில் அதிகரித்தே காணப்படுகின்றது. கேள்வியும் சடுதியாக அதிகரித்துள்ளது.

கொரோனா காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தற்போது இணையவழியில் இடம்பெறுவதனால் ‘ஸ்மாட்’ வகை அலைபேசிகளின் தேவை அதிகரித்துள்ளது. ஆசிரியர்களுக்கும் இதே நிலைமை ஏற்பட்டுள்ளது. அலைபேசி விற்பனை நிலையங்களில் அலைபேசிகளை வாங்கும் நிர்ப்பந்தத்துக்குள் அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேநேரம் விற்பனை முகவர்களும், அலைபேசி நிறுவனங்களிடம் அதிக கோரிக்கை முன்வைக்கின்றனர். எனினும், கையிருப்பில் இல்லை என்ற பதிலே கிடைப்பதாக மாவட்ட முகவர்கள் தெரிவிக்கின்றனர். (த-105)

# தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு தேர்தலில் அதிக ஆதரவு கிடைக்கும்

## அதன் பிரதித் தலைவர் வேலுகுமார் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 6

மலையக மக்களின் பிரச்சினைகளை தேசிய மயப்படுத்தி, அவற்றை அரசாங்க பொறிமுறைக்குள் உள்வாங்கி உரிய வகையில் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க தமிழ் முற்போக்கு கூட்டணி நடவடிக்கை எடுத்திருந்தது. இந்தப்பணியை தொடர்ந்தும் முன்னெடுக்க பொதுத்தேர்தலில் மக்கள் எமக்கு அமோக ஆதரவை வழங்குவார்கள் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமான வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

2015 இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் பின்னரே ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி உதயமானது. அதன்பின்னர் நடைபெற்ற பொதுத்தேர்தலிலும் மக்கள் எமக்கு ஆணை வழங்கினார்கள். ஐக்கிய தேசியக்கட்சியின் வெற்றிக்கு எமது மலையக மக்களும் முழுமையான பங்களிப்பை வழங்கினார்கள். மக்களின் ஆணையை ஏற்று, அவர்களின் வாழ்க்கை மற்றும் சமூக நிலைமையை மேம்படுத்துவதற்காக நான்கரை ஆண்டுகளில் பல்வேறு நடவடிக்கைகளை தமிழ் முற்போக்கு கூட்டணி முன்னெடுத்தது. எமது மக்களுக்காக வெளிநாடுகள் மற்றும் அமைப்புகளுடன் தமிழ் முற்போக்கு கூட்டணி சிறந்த உறவை பேணியது. இதன்பயனாகவே 10 ஆயிரம் வீடுகளை வழங்குவதற்கு பாரத பிரதமர் மோடி நடவடிக்கை எடுத்தார். எமது சமூக விடுதலைக்காக தூரநோக்கு சிந்தனை அடிப்படையில் அபிவிருத்தி அரசியல், உரிமை அரசியல் ஆகிய விதைகள் தமிழ் முற்போக்கு கூட்டணியால் விதைக்கப்பட்டன. அவற்றைப் பராமரித்து அறுவடை செய்யவிருந்த நிலையிலேயே ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. எனவே, பொதுத்தேர்தலில் நிச்சயம் நாம் வெற்றிபெறுவோம். எமது ஆட்சியின் கீழ் மலையகத்துக்கான மறுமலர்ச்சித் திட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் - என்றார். (ப)



# வர்த்தகரை காணவில்லை

வவுனியா, ஜூன் 6

முல்லைத்தீவு மாவட்டம் பாலிநகர் வவுனிக்குளம் பகுதியில் வசிக்கும் வர்த்தகர் கடந்த புதன் கிழமை தொடக்கம் காணாமற் போயுள்ளார் என்று பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.


மல்லாவியிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பாலசுந்தரராஜா பிரபாகரன் (வயது - 50) என்பவரே காணாமற்போயுள்ளார் என்று அவருடைய மனைவி மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அவர் இறுதியாக வெள்ளை நிறத்தில் கறுப்பு நிற புள்ளியுடைய மேலாடையும் கறுப்பு நிற ஜீன்ஸும் அணிந்திருந்தார் என்று முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவரை யாரேனும் கண்டால், 0766602122, 0778027498, 0778860893 என்ற அலைபேசி இலக்கத்துக்கு அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்குமாறு அவருடைய மனைவி வேண்டுகோள் விடுத்துள்ளார். (த-110,18)

# ஆக்கிரமிக்கும் வெட்டுக்கிளிகள்

## விவசாயிகள் பேரச்சம்



கொழும்பு, ஜூன் 6

மாத்தறை கிரிந்த எனும் இடத்தில் வெட்டுக்கிளிகளின் தாக்கம் அதிகரித்து வருகின்றமையால் விவசாயிகள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

அந்தப் பகுதியில் சோளப் பயிர்ச் செய்கை மற்றும் வாழைச் செய்கையைத்தான் வெட்டுக்கிளிகள் அதிகளவு தாக்கியுள்ளன.

வெட்டுக்கிளிகளால் ஏனைய பயிர்ச் செய்கையும் பாதிப்புக்கு உள்ளாகுமென அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை குருநாகல், மாவத்தகம, கம்பஹா, மீரிகம, அம்பாந்தோட்டை, கேகாலை, மாத்தறை ஆகிய இடங்களிலும் வெட்டுக்கிளிகளின் ஊடுருவல் அவதானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# முஸ்லிம் இளைஞனை தாக்கிய பொலிஸாரைத் தண்டியுங்கள்

## வலுக்கிறது அழுத்தம்

கொழும்பு, ஜூன் 6

அளுத்கம முஸ்லிம் இளைஞர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் மீது அரசு உரிய நடவடிக்கை முன்னெடுக்க வேண்டும் என்று வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சட்டத்தரணி ரிஸ்வி ஜவஹர்ஸா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மே மாதம் 25 ஆம் திகதி தர்கா நகரைச் சேர்ந்த தாரிக் அஹமட் பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து பொலிஸாரால் தாக்கப்பட்டார். இதை எந்தவொரு மனிதர்களாலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தச் சம்பவம் பொலிஸார் பிற இனத்தவர்கள் மீது காட்டும் பாகுபாட்டை அப்பட்டமாக வெளிக்காட்டுகிறது.

சிவில் சமூக ஒழுங்குகளைப் பாதுகாத்தல் என்பது பொலிஸாருடன் தொடர்புடையது. நாட்டின் அமைதி நிலைக்கான கட்டுமானப் பணிகளை மேற்கொள்வது மட்டுமன்றி சமூகத்தில் காணப்படும் பொதுவான அநீதிகளை இல்லாதொழித்தல், அச்சங்களை நீக்குதல், மக்களுடைய அடிப்படைத் தேவைகளை உத்தரவாதப்படுத்தல் போன்ற பல்வேறு விடயங்களில் நேர்மையுடன் செயலாற்றக் கூடிய பொலிஸார் தற்போது பாகுபாடுகளுடன் நடந்து கொள்வதைப் பார்க்கின்றபோது மனதுக்கு பெரும் கவலையையும் சந்தேகத்தையும் உண்டுபண்ணியுள்ளது.

தாரிக் அஹமட் மீது தாக்குதல் நடத்திய பொலிஸார் மீது அரசு கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். பொலிஸாரின் அடக்கு முறையையும் வன்முறையையும் பாகுபாட்டையும் இல்லாதொழித்து பொதுமக்களுக்கான நிலையான பாதுகாப்புக்கு அரசு உத்தரவாதம் வழங்க வேண்டும்- என்றார். (ப)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உரிமை இழந்தோம்: வரலாற்றை இழக்கலாமா?

மழைக்காலம் வந்தவுடன் டெங்குக் காய்ச்சல் பரவுவதைப் போல, தேர்தல் சீசன் வந்தவுடன் இனவாதக் காய்ச்சல் தென்னிலங்கையில் பெரும்பாலான அரசியல்வாதிகளுக்கு வந்துவிடும். இப்போது அந்த இனவாதக் காய்ச்சல் வழக்கம் போல பொதுபல சேனாவின் ஞானசார தேரருக்கு தொடங்கிவிட்டது. முழு இலங்கையும் பௌத்தருக்கே சொந்தம் என்ற பழைய புராணத்தை பாடத் தொடங்கிவிட்டார். ஞானசாரதேரர் இப்படிச் சொல்லி விட்டதால் அவரையும் விட நாமே மேலான இனவாதிகள் என்பதைக் காட்ட விமல் வீரவன்சவில் இருந்து கோத்தாபய வரை ஆளாளுக்கு தம் பங்குக்கு இது போன்ற இனவாதப் புராணங்களை அவிழ்த்துவிடுவார்கள். அந்த இனவாதத் தீயில் யதார்த்தப் பிரச்சினைகளை மறந்து இன்னொரு புனைவுலகுக்கு வலிந்து கொண்டு செல்லப்படும் சிங்கள மக்கள், அந்தப் புனைவுலகத்தையே நிஜமென நம்பி , அதிகமான இனவாதம் பேசுவோரே தம்முடைய உண்மையான தலைவர்கள் என்றெண்ணி வாக்குகளைப் போடுவார்கள். இதுவே காலாதிகாலமாக தென்னிலங்கையின் அரசியல் சூத்திரம்.

ஆனால் இதில் உள்ள ஆபத்து என்னவெனில், தேர்தலின் போது வாக்குகளுக்காக அடித்துவிடப்படும் இனவாதப் புனைவுகளை உண்மையென்று அதனைப் புனைந்தவர்களே கடைசியில் நம்பிவிடுவதுதான். அதனால் ஆட்சிக்கு வந்ததும் தாம் சொன்ன புனைவுகளை இன்னும் உண்மையானதாக மாற்றும் வேலைகளில் இறங்கிவிடுவார்கள். அண்மையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய கிழக்கு மாகாணத்துக்கான தொல்பொருள் செயலணி போன்றன எதிர்காலத்தில் இவ்வாறான இனவாதப் புனைவுகளை , செயற்கையான முறையில் உண்மையாக்க உற்பத்தி செய்யப்பட்டவையே. எந்தவொரு தமிழரும் இடம்பெறாத இந்தச் செயலணிதான், மரபார்ந்த தமிழர்களின் பூர்வீக நிலங்களில் தொல்பொருள் தொடர்பான ஆய்வுகள், பேணல்கள் என்வற்றைச் செய்யப்போகிறதாம். எப்படி வடக்கில், தொல்பொருள் திணைக்களத்தின் பேரால் வரலாறு திரிக்கப்பட்டதோ, அப்படியே கிழக்கிலும் நடக்கப்போகின்றது. திருக்கோணேச்சரம் ஆலயத்தை மறைத்து பிரமாண்டமான விகாரை எழுப்பப்பட்டு, அங்குதான் புத்தர் அரச உடைகளைக் களைந்து துறவிக்கான உடைகளை அணிந்தார் என்று சொன்னாலும் ஆச்சரியமில்லை. அதுபோலவே குளக்கோட்டன் கந்தளாய்க்குளத்தைக் கட்டிய வரலாறும் அப்படியே மாற்றப்பட்டு, இன்னொரு சிங்கள மன்னனாலேயே கந்தளாய்க்குள அணைகள் கட்டப்பட்டதான வரலாற்று ஆதாரங்களை இந்தத் தொல்பொருள் செயலணியினர் உற்பத்தி செய்வார்கள். அப்படியே கிழக்கை சிங்கள மக்களின் பூர்வீகம் என்று நிறுவி விட்டு, பின்னர் வடக்கையும் சிங்களவரின் தாயகமாக்க இன்னொரு செயலணி அமைக்கப்படலாம்.

இப்படி தாங்கள் அரசியல் செய்வதற்காக புனைவுகளைத் தொடர்ந்தும் உருவாக்கியதாலேயே , வந்தேறுகுடிகளான சிங்களவர்கள் முழு இலங்கையுமே தங்களின் பூர்வீக நிலமென்று, இங்கிருந்த ஆதிக்குடிகளான தமிழர்களை நோக்கி திமிரோடு சொல்ல முடிகின்றது. ஆனால் நாமோ நமக்கான வரலாற்றையும் அழித்துவிட்டு, இருக்கும் ஆதாரங்களையும் பேரினவாதிகளிடம் அடகுவைத்துக் கொண்டிருக்கிறோம். உரிமைக்காகப் போராடும் நிலை போய், எஞ்சிய இருப்பையாவது தக்க வைக்கப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். குறைந்தபட்சம் நம் வரலாற்று ஆதாரங்களையாவது இழக்காதிருக்க உரியவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து களமிறங்கவேண்டும். அதுவே காலத்தின் கோரிக்கையும் கூட.

# மசகு எண்ணெய் உற்பத்தி: ஆரம்பிக்கின்றது இலங்கை

கொழும்பு, ஜூன் 6

**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முதன்முறையாக மசகு எண்ணெய் உற்பத்தியை ஆரம்பிக்கவுள்ளது.**

நாட்டின் எரிபொருள் தேவைக்காக இதுவரை மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. கடந்த ஆண்டு மசகு எண்ணெய் இறக்குமதிக்காக 30 பில்லியன் ரூபா செலவிடப்பட்டது. இந்தநிலையில் முதன்முறையாக உள்நாட்டில் மசகு எண்ணெய் தயாரிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் மசகு எண்ணெய் உற்பத்தியை ஆரம்பிப்பது தொடர்பாக இலங்கைப் பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் நீண்டகாலமாகத் திட்டமிட்டிருந்தது. எனினும் பல காரணங்களால் ஆலையின் உற்பத்தி ஆரம்பிக்கப்படாதிருந்தது. அமைச்சர் மஹிந்த அமரவீர அண்மையில் ஆலைக்குக் களப் பயணம் மேற்கொண்டிருந்தார். அதன் பின்னர் ஆலையின் உற்பத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## ஐ.தே.க. பிளவுக்கு சஜித்தே பொறுப்பு

*சீண்டுகிறார் நாமல்*

கொழும்பு, ஜூன் 6

ஐக்கிய தேசியக் கட்சியின் வீழ்ச்சிக்கு முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவே பொறுப்புக் கூற வேண்டும். கட்சியின் உள்ளகப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் பிறரை விமர்ச்சிப்பது பயனற்றது. இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது

ஐக்கிய தேசியக் கட்சியைப் பிளவுபடுத்த ஆளும் தரப்பினர் எந்த முயற்சியும் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்துக்கும், கட்சிக் கொள்கைக்கும் எதிராகச் செயற்பட்டார். அதனாலேயே ஐ.தே.க. பிளவுபட்டது. அதற்கு அவர் மட்டுமே பொறுப்புக் கூற வேண்டும். பழமைவாய்ந்த ஐக்கிய தேசியக் கட்சியின் இன்றைய நிலைமை கவலைக்குரியது.

அரசு பொருளாதார முன்னேற்றம் தொடர்பாக அதிக கவனம் செலுத்தியுள்ளது. பிற கட்சிகளின் உள்ளகப் பிரச்சினைகளில் தலையிட வேண்டிய தேவை பொது ஜன பெரமுனவுக்குக் கிடையாது- என்றார். (எ-22)

## சீசெல்ஸ் நாட்டில் இலங்கையருக்கு உயர்பதவி

கொழும்பு, ஜூன் 6

சீசெல்ஸ் நாட்டின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக இலங்கை நீதிபதியான அந்தனி பிரான்சிஸ் திஸ்ஸ பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நீதிபதியான அந்தனி பிரான்சிஸ் திஸ்ஸ பெர்னாண்டோ சீசெல்ஸ் நாட்டில் குடியுரிமை பெற்றவர். இதற்கு முன்னர் திஸ்ஸ பெர்னாண்டோ சீசெல்ஸ் நாட்டின் சட்டமா அதிபராகவும் 10 ஆண்டுகள் பதவி வகித்துள்ளார்.

திஸ்ஸ பெர்னாண்டோ கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் பிஜி நாட்டின் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாகவும் கடமையாற்றியுள்ளார். அந்த நாட்டின் சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரச சட்டத்தரணியாகவும், மூத்த சட்டத்தரணியாகவும் 11 ஆண்டுகள் பணி புரிந்துள்ளார். சீசெல்ஸ் நாட்டின் நீதித்துறையில் மிகவும் உயர்பதவியாக மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் பதவி மதிக்கப்படுகின்றது. (எ)



## வடக்கில் காற்றின் வேகம் அதிகரிக்கும்

கொழும்பு, ஜூன் 6

வடக்கு உட்பட சில மாகாணங்களில் காற்றின் வேகம் அதிகரிக்கும் என்று வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, நுவரெலியா மற்றும் புத்தளம் மாவட்டங்களிலும் சில இடங்களில் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

ஊவா மாகாணத்தில் சில இடங்களில் பிற்பகலுக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியமும், புத்தளத்திலிருந்து கொழும்பு ஊடாக காலி வரையான கடற்பரப்புகளில் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியமும் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோமீற்றர் வரை காணப்படும்.

புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக முல்லைத்தீவு வரையான கடற்பரப்புகளிலும் ஹம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கலாம்.

புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக முல்லைத்தீவு வரையான கடற்பரப்புகளும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் என்றும் வானிலை அவதான நிலையத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# வடக்கில் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு உடன் முற்றுப்புள்ளிவைக்க நடவடிக்கை!

## ஆளுநர் பணிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 6**

**வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸுக்கும் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், விசேட பொலிஸ் செயலணியின் உறுப்பினர்கள், மாவட்டங்களின் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், மாகாண சுகாதாரப் பணிப்பாளர், மேலதிக மாவட்டச் செயலர்கள் உள்ளூர் அதிகார சபை ஆணையாளர், கல்வித் திணைக்கள செயலாளர், உள்ளூர் அதிகார சபை செயலாளர், போக்குவரத்து அதிகார சபை தலைவர் மற்றும் செயலாளர், ஆளுநரின் செயலாளர் மற்றும் உதவிச் செயலாளர் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயகத்தின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போதே ஆளுநர் மேற்படி வேண்டுகோளை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

'வடக்கு மாகாண பொலிஸார் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் முன்னெடுத்த அளப்பரிய சேவைகளைப் பாராட்டுகின்றேன். தற்போது வடக்கு மாகாணத்தில் சட்டவிரோதமான முறையில் சமுதாயத்தைப் பாதிக்கின்ற நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக, சட்டவிரோத மணல் அகழ்வு, சட்டவிரோத மதுபான தயாரிப்பு, மதுபான விற்பனை, களவுகள் மற்றும் வாள்வெட்டு, போதைப்பொருள் துஷ்பிரயோகம், வீதி விபத்துக்கள் ஆகியன தொடர்கின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

முக்கியமாக மணல் அகழ்வை முறையான சட்டங்களுக்கு உட்படுத்தி அதற்கான அனுமதிகளை வழங்கி தேவைப்படும் பட்சத்தில் மட்டும் மணல் அகழ்வு செய்யப்பட வேண்டியது அவசியமாகின்றது. மணல் அகழ்வு வியாபாரம் அல்ல என்பதை அனைவரும் மனதில்கொள்ள வேண்டும். மாணவர்கள் மற்றும் இளைய சமுதாயத்தைப் பாதிக்கின்ற வகையில் களவு, வாள் வெட்டு, போதைப்பொருள் விற்பனை போன்ற விடயங்களின் பின்னணிகள் உள்ளிட்ட அனைத்துக் காரணங்களையும் கண்டறிந்து அவற்றைத் தடைசெய்வதோடு நிலைமைகளை முற்றாகக் கட்டுக்குள் கொண்டுவர வேண்டும்.

வீதி விபத்துக்கள் தொடரும் நிலையில் அதற்கான காரணங்களை முழுமையாக ஆராய்ந்து போக்குவரத்துச் சட்டங்களை இறுக்கமாகப் பின்பற்றுவதோடு சட்டத்தை மீறுவோருக்குப் பாரபட்சமின்றி தண்டனை வழங்க வேண்டும். இது போன்ற சட்டவிரோதமான விடங்களைத் தடுப்பதன் ஊடாகவே எமது மாணவர்களையும், இளம் சந்ததியினரையும், ஒட்டுமொத்த சமுதாயத்தையும் நேரிய முன்னேற்றப் பாதையொன்றில் இட்டுச் செல்ல முடியும்.

அந்தச் செயற்பாட்டை முன்னெடுப்பதற்காக கிராம அலுவலர்கள் முதல் மாவட்டச் செயலர்கள், மேலதிக மாவட்டச் செயலர் உள்ளிட்டவர்கள் பொலிஸாருக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும். அதன்மூலமே எமது சமுதாயத்தைக் கண்ணியமுள்ள ஒழுக்கமான சமுதாயமாக முன்னேற்றம்மிக்கதாக மாற்ற முடியும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

மிக முக்கியமாக பாடசாலைகளில் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும். அத்துடன் பாடசாலை மாணவர்களுக்காகப் பாடசாலை கால அட்டவணையையும், அரச மற்றும் தனியார் பஸ்களின் கால அட்டவணையையும் ஒருங்கிணைத்து ஒரு புதிய கால அட்டவணையைத் தயார் செய்து நடைமுறைப்படுத்த போக்குவரத்து அதிகார சபை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

சமுதாய நலனில் அக்கறைகொள்ள வேண்டிய மாணவர்களையும் இளைஞர், யுவதிகளையும் உருவாக்க திணைக்களங்கள் தங்களுக்கான அதிகாரங்களை உரிய முறையில் பயன்படுத்த வேண்டியது மிகவும் முக்கியமாகும்' - என்றார். (ம-22)

# அவசியமான இடங்களில் குப்பைத்தொட்டிகள் வைப்பு



வவுனியா, ஜூன் 6

வவுனியா நகரின் முக்கிய பகுதிகளில் குப்பைத் தொட்டிகள் நேற்று வைக்கப்பட்டுள்ளன.

வவுனியா நகரசபை உறுப்பினர் சுந்தரலிங்கம் காண்டீபனின் முயற்சியில் இவை வைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தவகையில் வவுனியா காளி கோவில் பகுதியில் 02 தொட்டிகளும், குருமன்காடு பிள்ளையார் ஆலய சந்தியில் ஒரு குப்பைத் தொட்டியும், திருநாவற்குளம் பகுதியில் 3 தொட்டிகளும் வைக்கப்பட்டன. அவற்றை பராமரிப்பதற்கான பொறுப்புகளும் அந்தப் பகுதியை சேர்ந்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

நிகழ்வில் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் கோகிலன், தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் செயலாளர் கெர்சோன் கரிஸ், திரு நாவற்குளம் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் ச.ரவி, உப தலைவர் பா.சிவகுமார் என பலரும் கலந்து கொண்டனர். (த-110)

# விபத்தில் சிக்கிய சிறுவன் 4 நாள்களின் பின் சாவு!

கொழும்பு, ஜூன் 6

வீதி விபத்தில் காயமடைந்த சிறுவன் சிகிச்சையின் பின் வீடு திரும்பி, மீண்டும் நோய்வாய்ப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளான். இந்தச் சம்பவம் மட்டக்களப்பில் இடம்பெற்றது.

கல்லடியைச் சேர்ந்த தந்தையும் மகனும் தமது வீட்டுக்கு அருகாமையில் உள்ள கடைக்கு மோட்டார் சைக்கிளில் சென்று வீடு திரும்பி வரும்போது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதால் கடந்த 30ஆம் திகதி விபத்து ஏற்பட்டது. காயமடைந்த தந்தையும் மகனும் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

சிகிச்சையின் பின்னர் மறுதினம் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். காயமடைந்த சிறுவன் தொடர்ந்து நான்கு நாள்களாக உணவு எதுவும் உட்கொள்ள முடியாத நிலையில் மீண்டும் கடந்த புதன்கிழமை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டான். நேற்றுமுன்தினம் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளான் என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# தேர்தலின் பின்னரே உறுப்பினர் நியமனம்

மன்னார், ஜூன் 6

மன்னார் நானாட்டான் பிரதேச சபைக்கான புதிய உறுப்பினர் தெரிவு பொதுத் தேர்தலின் பின்னரே சாத்தியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நானாட்டான் பிரதேச சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவர் கடந்த மாதம் உயிரிழந்திருந்தார். அவருடைய வெற்றிடத்துக்கு அந்தக் கட்சியின் சார்பில் இன்னும் எவரும் நியமிக்கப்ப டவில்லை.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மன்னார் மாவட்ட முக்கியஸ்தர் ஒருவரை தொடர்பு கொண்டு கேட்டபோதுஅவர் தெரிவித்ததாவது:

நானாட்டான் பிரதேச சபையின் உறுப்பினராக இருந்த இராசிக் பரீது காலமானார்.

அவருடைய இடத்துக்கு புதிய உறுப்பினரை தெரிவுசெய்வது தொடர்பாக கட்சியின் முக்கியஸ்தர்களிடம் பேசப்பட்டபோது நாட்டின் தற்போதைய பல்வேறுபட்ட பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் பொதுத்தேர்தலின் பின்னரே நானாட்டான் பிரதேச சபைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் க்ட்சியின் சார்பில் புதிய உறுப்பினர் தெரிவு செய்யப்படும் சாத்தியம் உள்ளது - என்று தெரிவித்தார். (த-213)

# மட்டக்களப்பில் குழு மோதல்; நால்வருக்கு வாள் வெட்டு

மட்டக்களப்பு, ஜூன் 6

மட்டக்களப்பு சந்திவெளி மற்றும் திஹிலிவெட்டை ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற குழு மோதலில் நான்கு பேர் வாள் வெட்டுக்கு இலக்காகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் மேலும் எட்டுப் பேர் தேடப்பட்டு வருகின்றனர் என்று ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மூன்று நாள்களாக இந்தக் குழு மோதல் இடம்பெற்று வந்துள்ளது.

ஆலய உற்சவம் ஒன்றின் போது பெண்களுடன் ஒரு குழுவினர் சேட்டையில் ஈடுபட்ட வேளையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கோஷ்டி மோதலாக மாறியதாக கூறப்படுகிறது. சந்திவெளி பிரதேசத்தை சேர்ந்தவர்கள் மற்றும் திஹிலிவெட்டை பகுதியைச் சேர்ந்தவர்கள் மாறிமாறி இரு இடங்களுக்கும் சென்று மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

மோதலின்போது குறித்த பிரதேசங்களில் அல்லோலகல்லோல நிலை காணப்பட்டதாக அந்தப் பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர். இந்த மோதல் சம்பவத்தை சிலர் அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களிடையே ஏற்பட்ட மோதலாக சித்தரிக்க முனைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# 50 வீத ஆசனங்களில் பயணிகள் ஏறியதும் ஓட ஆரம்பிக்கவும்

## போக்குவரத்து அமைச்சு பணிப்பு

**கொழும்பு, ஜூன் 6**

**பேருந்து நிலையங்களில் 50 சதவீத ஆசனங்களில் பயணிகள் ஏறியதும் பேருந்துகள் சேவையை ஆரம்பிக்க வேண்டும். அதன்மூலம் தரிப்பிடங்களிலுள்ள பயணிகள் அனைவரும் பயணிக்க வாய்ப்புக் கிடைக்கும் என்று போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு அறிவித்துள்ளது.**

வரும் திங்கட்கிழமை தொடக்கம் இந்த நடைமுறை பின்பற்றப்படவேண்டும் என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது. பேருந்துகள் இருக்கைகளின் எண்ணிக்கையின்படி மட்டுமே பயணிகளை ஏற்றிச் செல்வது கட்டாயமாகும். அதேநேரத்தில் அனைத்து பயணிகளும் முகக்கவசம் அணியவேண்டும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

முகக் கவசம் அணியாத பயணிகள் பொதுப் போக்குவரத்து வழியாக பயணிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். பேருந்து நிலையங்கள் மற்றும் ரயில் நிலையங்களில் பயணிகள் கைகளைக் கழுவுவதற்கான வசதிகள் நிறுவப்பட்டுள்ளன. கொவிட்19 பரவுவதைத் தடுப்பதற்கான சுகாதார சேவை வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது. இதேவேளை, இலங்கை போக்குவரத்துச் சபையின் 5 ஆயிரத்து 300 பேருந்துகளும் மற்றும் 23 ஆயிரம் தனியார் பேருந்துகளும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. எனினும், பயனுள்ள பயணிகள் போக்குவரத்து சேவைகளுக்கு இந்த எண்ணிக்கை இன்னும் போதுமானதாக இல்லை என்று போக்குவரத்து அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அதனால் பாடசாலை, சுற்றுலா மற்றும் பிற சேவைகளில் ஈடுபடும் பேருந்துகளை தற்காலிக பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தும் நோக்குடன் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (த)

*வைப்பிலிடப்படும் பணத்தில்*

## 6 லட்சம் ரூபாவுக்கு மட்டுமே மத்திய வங்கி பொறுப்பு

*பந்துல குணவர்தன தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 6



நிதி நிறுவனங்களில் வைப்புச் செய்யும் பணத்தில் ஆறு லட்சம் ரூபாவுக்கு மட்டுமே இலங்கை மத்திய வங்கி பொறுப்புச் சொல்லும் என அரசு தெரிவித்துள்ளது.

அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இயங்கிவரும் பல்வேறு நிதி நிறுவனங்களில் மக்கள் பணத்தை வைப்புச் செய்துவருகின்றனர். இவ்வாறு வைப்புச் செய்யப்படும் பணத் தொகையில் ஆறு லட்சம் ரூபா வரையிலேயே, இலங்கை மத்திய வங்கி பொறுப்பு ஏற்கும். எனவே நாட்டின் நிதி நிறுவனங்களில் பணத்தை வைப்புச் செய்வோர், தங்களது வைப்புப் பணத் தொகையில் எந்தளவு தொகை மிகவும் பாதுகாப்பானது என்பது பற்றி அறிந்திருக்க வேண்டியது அவசியமானது என பந்துல குணவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நீண்ட காலம் இலங்கையில் இயங்கிவந்த நிதி நிறுவனமொன்று மூடப்பட்டதனைத் தொடர்ந்து அந்த நிறுவனத்தில் பணத்தை வைப்புச் செய்திருந்த வைப்பாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பெருந்தொகை பணத்தை நிதி நிறுவனங்களில் வைப்புச் செய்துள்ளவர்கள் இந்த விடயங்கள் குறித்து கவனம் செலுத்துவது பொருத்தமானது என்று தெரிவிக்கப்படுகிறது. (ப)



கொவிட் 19 பாதுகாப்பு நடவடிக்கைக்கு தேவையான உடல் வெப்பத்தை அளவிடும் கருவி ஒன்று உலக உணவுத்திட்டம் ஊடாக துணுக்காய் பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. (த-222)

## மோ.சைக்கிள்களை பெற்றுக்கொள்ளவும்

சாவகச்சேரி, ஜூன் 6

உரிமை கோரப்படாமலும் இலக்கங்கள் தெளிவற்ற நிலையிலும் 13 மோட்டார் சைக்கிள்கள் சாவகச்சேரி நீதிமன்றில் உள்ளன.

இவற்றின் உரிமையாளர்கள் நீதிமன்றில் ஆதாரங்களைக் காண்பித்து அவற்றை பெற்றுக்கொள்ளுமாறும் தவறின் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென்றும் நீதிமன்ற பதில் பதிவாளர் அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸாரால் சான்றுப்பொருள்களாக இவை ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மோட்டார் சைக்கிள்களின் விவரம் வருமாறு, 500 1132, NPXE 1097, NP HT 8021, NPMH 1686, NPXY 3438, NPMV 4487, NPWX 0662, NPGBX 2922, NPMZ 8887, NPBAK 4393, NPTZ 0899, NPWX 4400, EPJN 7880. (த-9)

## சியோன் தேவாலயத் தாக்குதல் இரகசிய காணொலி பகிரங்கம்

கொழும்பு, ஜூன் 6

ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று, மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டமைதொடர்பானவிசாரணைகள் ஜனாதிபதி ஆணைக் குழுவில்நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது, தாக்குதல் தொடர்பாக இதுவரை ஊடகங்களுக்கு வெளியிடப்படாத சி.சி.டி.வி காட்சிகளை ஜனாதிபதி ஆணைக் குழு பகிரங்கப்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் தாக்குதலை நடத்தியவர் தாக்குதல் நடத்தப்பட்ட நாளுக்கு முதல் நாள் இரவு மட்டக்களப்புக்கு பயணிகள் பேருந்திலேயே குண்டைமட்டக்களப்புக்குஎடுத்துச் சென்றதாக ஜனாதிபதி ஆணைக் குழுவில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு பொறுப்பாக இருந்த குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைமை பொலிஸ் பரிசோதகர் சமன் வீரசிங்க சீயோன் தேவாலய தாக்குதல் தொடர்பான ஆதாரங்களை முன்வைத்து ஆணைக்குழுவில் சாட்சியம் வழங்கினார்.

இதன்போது சாட்சியம் அளித்த அவர் சீயோன் தேவாலயத்திற்கு அருகில் இருந்த சி.சி.டி.வி காட்சிகளை ஆய்வு செய்தபோது தாக்குதலை நடத்தியவர் மொஹமட் நாசர் மொஹமட் ஆசாத் என அடையாளம் காணப்பட்டதாக கூறினார். தாக்குதல்தாரி 2005, 2012ஆம் ஆண்டுகளில் கட்டாருக்குச்சென்றுநாடுதிரும்பியவர் என அவர் சாட்சியமளித்தார்.

மொஹமட் ஆசாத் 2012ஆம் ஆண்டில்அப்துல்ரஹீம்பெரோசா என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டதாகவும் அந்த பெண் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பிறகு சாய்ந்தமருதில் உள்ள ஒரு வீட்டில் இடம்பெற்ற வெடிச் சம்பவத்தில் உயிரிழந்தாகவும் அவர் சாட்சியமளித்தார்.

தனதுமகனின்புகைப்படங்களை எரித்ததற்கான ஆதாரங்களை மறைத்த குற்றச்சாட்டில்கைதான தாக்குதல் நடத்தியவரின் தாய் இப்போது குற்றப்புலனாய்வு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் சியோன் தேவாலயத்தில் தாக்குதல் நடத்தியவரும் அவரது மனைவியும் தாக்குதலுக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் திகதி இரவு கல்முனையில் இருந்து கொழும்பை வந்தடைந்ததாக சாட்சியாளர் கூறினார்.

அவர்கள் கொள்ளுப்பிட்டி லகி பிளாசா தொடர் மாடி வீட்டு தொகுதியில் தங்கியிருந்த சஹ்ரான் ஹாசிம் அவரது மனைவி மற்றும் பிள்ளை ஆகியோரை கடுவாபிட்டி தேவாலயத்தில் குண்டு தாக்குதல் நடத்திய மொஹமட் ஹஸ்தூன் மற்றும் அவரின் மனைவி சாரா ஜஸ்மின் அல்லது புலஸ்தினி ஆகியோரைச் சந்தித்ததாக சாட்சியாளர் கூறினார்.

பின்னர், ஏப்ரல் 20ஆம் திகதி மதியம், மொஹமட் ஆசாத்தின் வாகனம் சஹாரான் ஹாஷிமின் சகோதரர் ரில்வான் தங்கியிருந்த பாணந்துறையில் உள்ள ஒரு வீட்டிற்குச் சென்றிருந்தாக அவர் கூறினார்.

சீயோன் தேவாலயத்தில் தாக்குதல் நடத்திய மொஹமட் அஹமது ஆசாத், தாக்குதலுக்கு முந்தைய நாள் இரவு 8.52 மணியளவில் மருதானை சாஹிரா கல்லூரி அருகே கொழும்பிலிருந்து கல்முனை நோக்கி சென்ற பேருந்தில் ஏறியதாகவும் சாட்சியாளர் கூறினார். தாக்குதல் நடத்தியவரின் முதுகில் ஒரு பை மற்றும் கைகளில் மற்றொரு பை இருந்ததை சிசிடிவி காட்சிகள் தெளிவாகக் காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார். அந்த பெரிய பையை அவர் பேருந்தின் அடிப் பகுதியில் வைத்ததாக ஓட்டுனர் கூறியதாக சாட்சியாளர் கூறினார்.

கொச்சிக்கடை தேவாலயத்தில் தாக்குதல் நடத்திய அலாவுதின் மெஹமட் என்பவரே அவருக்கு பஸ்ஸின் இருக்கையை முன்பதிவு செய்தாகவும் சாட்சியாளர் கூறினார்.

ஏப்ரல் 21ஆம் திகதி அதிகாலை 2.16 அளவில் குண்டுதாரி பேருந்திலிருந்து இறங்கி ஜும்மா மஸ்ஜித் பள்ளிவாசலுக்கு சென்றதாக சி.சி.டி.வி. காட்சிகள் புலப்படுத்துவதாகவும் சாட்சியாளர் தெரிவித்தார்.

குண்டுதாரி அதிகாலை 4.39 மணி வரை பள்ளிவாசலுக்கு முன்னால் காத்திருந்தாகவும் அவர் கொண்டு வந்த பொருட்கள் அனைத்தும் அவருக்கு அருகில் தரையில் கிடந்தாகவும் ஆனால் அந்த வழியாக சென்ற பொலிஸ் மொபைல் கண்காணிப்பு வாகனங்கள் அதனை கண்டுகொள்ளவில்லை எனவும் அவர் ஆணைக்குழுவில் விளக்கமளித்தார்.

அதிகாலை 4.39 அளவில் பள்ளிவாசல் திறக்கப்பட்டதாகவும், அப்போது குண்டுதாரி பள்ளிவளாகத்திற்குள் நுழைந்து பல மணி நேரம் அமைதியின்றி நடந்து கொண்டதாகவும் பிரதான பொலிஸ் பரிசோதகர் கூறினார்.

காலை 8.32 அளவில் குண்டுதாரி சிவப்பு நிற டிசேட் அணிந்து ஒரு பையுடனும், கையில் ஒரு பையும் எடுத்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டதாக சாட்சியாளர் ஆணைக்குழுவில் தெரிவித்தார்.

அவ்வாறு வந்தவர் காலை 9.03 அளவில் சியோன் தேவாலயத்தில் குண்டை வெடிக்கச் செய்தாகவும் பொலிஸ் பரிசோதகர் சமன் வீரசிங்க ஜனாதிபதி ஆணைக் குழுவில் சுட்டிக்காட்டினார். (ம)



வவுனியாவில் இனங்காணப்பட்ட வெட்டுக்கிளி

# வெட்டுக்கிளிகளால் இலங்கைக்கு ஆபத்தா?



நேர்கண்டவர்: ந.லோகதயாளன்

**உலகம் முழுவதும் கொரோனா ஆட்டிப் படைக்கும் நிலையில் அதற்கு அடுத்தபடியாக பல நாடுகளை அச்சுறுத்தும் வெட்டுக்கிளிகள் இந்தியாவினை மட்டுமன்றி இன்று இலங்கை விவசாயிகளையும் கிலிகொள்ள வைத்துள்ளன. இந்த நிலையில் வெட்டுக்கிளி தாக்கம் தொடர்பில் கிளிநொச்சியில் அமைந்துள்ள பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய பூச்சியியல் ஆராய்ச்சியாளர் ஸ்ரீஸ்பரலிங்கம் ராஜேஸ் கண்ணா வெட்டுக்கிளிகள் பற்றிய பல தகவல்களை உதயன் வாசகர்களுக்காக பகிர்ந்து கொள்கிறார்.**

**கே:** கொரோனா பற்றிய அச்சமும், கதையாடல்களும் குறைவடையத் தொடங்கியுள்ள நிலையில், மனித குலத்துக்கு இன்னொரு ஆபத்தாக வெட்டுக்கிளிகளின் படையெடுப்பு நிகழத் தொடங்கியுள்ளது. இப்படி அச்சமூட்டும் மிகச்சிறிய பூச்சி இனமான வெட்டுக்கிளிகள் எவ்விதமான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன?

**ப:** வெட்டுக்கிளிகளின் ஆயுள் காலம் என்பது 140 நாட்கள் தொடக்கம் 180 நாட்கள் மட்டுமே. அதனுடைய பாதிப்பு என்பது விவசாய உற்பத்தி கொண்ட பல்வேறு பயிர்களையும், மரங்களையும் விளைதானியங்களையும் சேதப்படுத்துவதாகவே இருக்கும். அது மரக்கறி வகைகள், பல மரங்கள் மற்றும் சிறுதானியம், நிலக்கடலை வரையும் இருக்கும். அதேநேரம் நேரடியாக வெட்டுக்கிளிகளால் மனிதப் பாதிப்பு கிடையாது.

**கே:** இவ்வாறு பாதிப்பினை ஏற்படுத்தும் வெட்டுக்கிளியில் எத்தனை வகை இனங்கள் உண்டு? அவை அனைத்துமே பாதிப்பினை ஏற்படுத்துமா ?

**ப:** வெட்டுக்கிளிகளில் பல வகைகள் உண்டு. உலகில் வெட்டுக்கிளிகளில் சுமார் 27 ஆயிரம் இனங்கள் உண்டு. இவற்றில் 10 வகையான வெட்டுக்கிளிகளே முக்கியத்துவம் வாய்ந்தவை . இவற்றில் 4 வகையான வெட்டுக்கிளிகளே பெருமளவான சேதத்தை விளைவிக்கின்றன. அதேநேரம் இந்தியாவில் தற்போது அதிக தாக்கத்தினை ஏற்படுத்தும் வகையான பாலைவன வெட்டுக்கிளிகள் இலங்கையில் சாதாரணமாக காணப்படவில்லை.

**கே:** இலங்கையின் குருநாகல் மாவட்டத்தின் மாவத்தகமவில் இனம்காணப்பட்ட வெட்டுக்கிளிக் கூட்டம், இந்தியாவில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் பாலைவன வெட்டுக்கிளி இனத்தைச் சேர்ந்ததா?

**ப:** குருநாகல் மாவட்டத்தின் மாவத்தகமவில் தென்னம்பிள்ளைகளில் இனங்காணப்பட்ட வெட்டுக்கிளிகள், மா, கொய்யா, சோளம், கோப்பி , மரவள்ளி , கரும்பு , மிளகாய் , தேக்கு , கொக்கோ , எள்ளு, என்பவற்றையும் தாக்கும் இயல்புடையது . இருப்பினும் இவ்வாறு இனம்காணப்பட்ட வெட்டுக்கிளிகள் பாலைவன வெட்டுக்கிளிகள் அல்ல. இவை மஞ்சள் புள்ளி வெட்டுக்கிளிகள் என அழைக்கப்படும் மற்றொருவகையானவை . இருப்பினும் அவையும் ஓரளவு அதிக பாதிப்பினை ஏற்படுத்தக்கூடியவைதான். இதனால் அவற்றினை கிருமிநாசினி ( மருந்து ) விசிறி அழிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**கே:** வெட்டுக்கிளிகளை கிருமிநாசினி மூலம்தான் அழிக்க முடியுமா அல்லது தானாகவே அழிவடையுமா?

**ப:** வெட்டுக்கிளிகளின் எதிரியாக பறவைகள், தவளை, கோழிகள் , பல்லி , ஓணான் என்பனவுண்டு. இவை தவிரபங்கசுக்கள் , பக்ரீறியாக்கள் , நெமற்றோடுக்கள் ஆகியவற்றுடன் பல்வேறு பூச்சிகளும் இவற்றினை அழிக்கின்றன. அவற்றுக்கும் அப்பால் கோழிக்கும் உணவாக்கப்படுகின்றது. இதனால் இயற்கை சமநிலை பாதிப்படையாது வெட்டுக்கிளிகள் பெருக்கம் தடுக்கப்படும். அதேநேரம் இவை அளவுக்கு அதிகமாகப் பெருகினால் , அவற்றை அழிப்பதற்கான பூச்சி நாசினிகள் இலங்கையிலும் உண்டு.

**கே:** இந்தியாவில் தற்போது பாதிப்பை ஏற்படுத்தி வரும் பாலைவன வெட்டுக்கிளிகள் எங்கிருந்து வந்திருக்கலாம்?

**ப:** இந்த மிகவும் ஆபத்தான வெட்டுக்கிளிகள் அதிக அளவில் முதலில் எதியோப்பியாவில் 2019ஆம் ஆண்டில் தென்பட்டன. பின்னர் அங்கிருந்து ஆபிரிக்காவின் சில நாடுகள் , ஈரான் , சவுதி அரேபியா வழியாக பாகிஸ்தானை அடைந்து பின்பு அங்கிருந்து தற்போது இந்தியாவுக்கு வந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

**கே:** தற்போது பரவி வரும் ஆபத்தான பாலைவன வெட்டுக்கிளிகள், உலகில் எவ்வாறு பரவுகின்றன? அவை இலங்கைக்கும் பரவும் சாத்தியம் உண்டா?

**ப:** வெட்டுக்கிளிகள் பெரும்பாலும் நிலத்தாலேயே பரவக்கூடியவை. அந்த வகையில் அவை அனைத்தும் நிலத் தொடர்பு உள்ள நாடுகளின் ஊடாகவே பரவியுள்ளன. அதேநேரம் இந்தியாவில்கூட தற்போது மகாராஷ்டிரா, குஜராத், மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களில் பரவியுள்ளபோதும் தமிழ் நாட்டில் இன்னும் இனம்காணப்படவில்லை. அந்த வகையிலும் நாம் பயம்கொள்ளத் தேவையில்லை. இலங்கை தனித்தீவாக இருப்பதனால் பாலைவன வெட்டுக்கிளிகளிடம் இருந்து பாதுகாக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

**கே:** ஆபத்தான வெட்டுக்கிளிகள் , ஆபத்தற்ற வெட்டுக்கிளிகளை எவ்வாறு இனம் காண்பது?

**ப:** வெட்டுக்கிளிகளில் நீண்ட கொம்பு வெட்டுகிளி, குறுகிய கொம்பு வெட்டுகிளி என இருவகையான வெட்டுக்கிளிகளே உண்டு. அதில் பெரிய கொம்பு வெட்டுகிளிகள் மனிதருக்கு நன்மை பயக்கும் என்பதனால் ஆபத்து கிடையாது. சிறிய கொம்பு வெட்டுக்கிளிகளே பயிர்களில் பாதிப்பினை ஏற்படுத்தும் . இவ்வாறு பாதிப்பினை உண்டுபண்ணும் வெட்டுக்கிளிகளில் தலைப்பகுதி கருமை நிறமாகவும் மஞ்சள் நிற குழாய் உருவான பட்டியை நெஞ்சுப் பகுதியிலும் கொண்டிருக்கும். வயிற்றுப்பகுதி கறுப்பு நிறமானதாகவும் பிரகாசமான சிவப்பு பட்டிகளைக் குறுக்காக கொண்டதாகவும் காணப்படும். முக்கியமாக இதன் சிறகுகள் மெல்லிய பச்சை நிறமானதாகவும் அதிக எண்ணிக்கை மஞ்சள் புள்ளிகள் நிறைந்தும் காணப்படும்.

**கே:** ஒரு சாதாரண வெட்டுக்கிளிக்கும், ஆபத்தான வெட்டுக்கிளிகளுக்கும் பெருக்கத்தில் வித்தியாசம் உண்டா , அவை எந்த வேகத்தில் பெருகும் தன்மை கொண்டவை?

**ப:** சாதாரண வெட்டுக்கிளிகள் இயற்கை எதிரிகளினால் ( பீடைகளால்) கட்டுப்படுத்தப்படுவதனால் அதிக சேதம் ஏற்படுவதில்லை. ஆனால் ஆபத்தான வெட்டுக்கிளிகள் இரு மாதங்களில் 100 தொடக்கம் 150 வரையான முட்டை இடும். அவை ஒரு கிழமை இடைவெளியில் தொடர்ந்து மூன்று தடவை இடும். ஒரு சதுர மீற்றர் பரப்பில் ஆயிரம் முட்டைகளையிடும். இம் முட்டைகள் உயர் வெப்பநிலை , நுண்அங்கிகள் மற்றும் பூச்சிகள் என்பனவற்றில் இருந்து பாதுகாக்கப்பட்ட நிலையில் பொட்டலங்களாக உறையினால் பாதுகாக்கப்பட்ட நிலையில் நிலத்தின் கீழாக இடப்படுகின்றன. இதனால் அவை பரவும் வேகம் அதிகமே.

**கே:** வெட்டுக்கிளிகளை எந்த வகைகளில் கட்டுப்படுத்தலாம் அல்லது அழிக்கலாம்?

**ப:** இவற்றை இரசயானப் பதார்த்தங்களைப் பயன்படுத்தாமல் இலகுவாக அழிக்கலாம். அதாவது வானில் கூட்டமாக வெட்டுக்கிளிகள் காணப்படும்போது ஒலி எழுப்புவதன் மூலம் நிலத்தை வந்தடைவதனைத் தடுக்கலாம். அடுத்தபடியாகநிலத்தில் கூட்டமாக வெட்டுக்கிளிகள் அணிவகுத்து செல்லும்போது அவற்றின் மீது காய்ந்த புற்கள் , சருகுகள் போன்றவற்றினைப் போட்டு எரிப்பதன் மூலம் அழிக்க முடியும். இவை தவிர பாரிய வலைகளை கட்டி விடுவதன் மூலம் நிறைஉடலிகள் தரையை வந்தடைவதனை தடுக்கலாம். அதேபோல் 10 மில்லி லீற்றர் வேப்பெண்ணையை 15 லீற்றர் நீரில் சிறிதளவு சவர்க்கார நீரும் சேர்த்து கரைத்து பயிர்களில் தெளிப்பதன் மூலமும் விரட்டலாம்.

உயிரியல் பீடை கொல்லியான மெற்றாரைசியம் என்ற பங்கசுவின் வித்திகளின் 75 கிராமை 15 லீற்றர் நீரில் கரைத்து வெட்டுக்கிளிகளின் மீது விசுறுவதன் மூலம் அவற்றினை அழிக்கலாம். உருளைகளைப் பயன்படுத்தி பயிர்களுக்கு இடையேயும் , பயிரிடப்படாத பகுதிகளிலும் உருட்டிச் செல்வதன் மூலம் இவற்றை நசித்து அழிக்கலாம். வயலைச் சூழவுள்ள பண்படுத்தப்படாத நிலங்களை முள் கலப்பைகொண்டு உழுதும் கட்டுப்படுத்தலாம். இவ்வாறான முறைகளில் கட்டுப்படுத்த முடியாத நிலைமை காணப்பட்டால் மட்டுமே டயசினோன் குறுநல், காபோசல்பான் , டெல்றாமெத்திறின் , சிப்றோனில் போன்ற பூச்சி நாசினிகளை சிபார்சு செய்யப்பட்ட அளவில் பயன்படுத்தி வெட்டுக்கிளிகளை அழிக்க முடியும். இதில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காலை 7 மணிமுதல் 10 மணி வரையும் மாலை 5 மணி முதல் 7 மணி வரையான காலப்பகுதியில் மட்டுமே கிருமி நாசினி விசிறப்பட வேண்டும். அதேபோன்று அறுவடைக்கு முந்திய கால இடைவெளியும் பேணப்பட வேண்டும். அதேபோல் மருந்து விசிறும்போது பாதுகாப்பு உடை அணிவது முக்கியமானது.

**கே:** இலங்கையில் தற்போதுதான் வெட்டுக்கிளி தொடர்பில் பேசப்படுகின்றதா அல்லது முன்பு எப்போதாவது இப்படி வெட்டுக்கிளிகளால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா?

**ப:** இலங்கை சுதந்திரம் அடைய முன்பே 1925 ஆம் ஆண்டு இலங்கையில் வெட்டுக்கிளிகள் கூட்டம் கூட்டமாக தென்னம்பிள்ளைகளில் பாதிப்பை ஏற்படுத்தின. இதன் பின்னர் அவை கட்டுப்படுத்தப்பட்டன. அந்தக் காலத்தில் கிருமி நாசினிகளும் இல்லாத காலம். இருப்பினும் அப்போதே வை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**கே:** வடக்கு மாகாணத்தில் எங்கு வெட்டுக்கிளி தொடர்பில் முறையிடப்பட்டுள்ளது? அவை ஆபத்தானவெட்டுக்கிளிகளா?

**ப:** பதில் : வடக்கே வவுனியாவில் கோவில்புளியங்குளம் பகுதியில் இத்தகைய வெட்டுக்கிளிகள் கூட்டமாக வந்ததாக முறையிடப்பட்டது. ஆனால் அவை பாலைவன வெட்டுக்கிளி அல்ல. அதனால் விவசாயிகள் அச்சமடையத் தேவையில்லை.

# அழகான கல்கிசை கடற்கரை கழிவுகளால் அசிங்கமாகியது

**கொழும்பு, ஜூன் 6**

**பருவ மாற்றத்தின் போது இம்முறை வழமைக்கு மாறாக கல்கிசை கடற்கரையில் அதிகளவான கழிவுகள் கரையொதுங்கியுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.**



உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் இங்கையிலுள்ள கடற்கரைகளில் கல்கிசை கடற்கரைக்கு தனிச் சிறப்புண்டு. கடற்கரைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் அங்கே குப்பைகளைப் போடக்கூடாது என்பதை அறிவுறுத்தும் வகையில் அறிவித்தல் பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு கடற்கரையின் துப்புரவு பேணப்படும் நிலையில் தற்போது அங்கே கழிவுகள் நிறைந்துள்ளன என்று சுட்டிக்காட்டப்படுகிறது. இது தொடர்பில் தெஹிவளை கல்கிசை மேயர் ஸ்டான்லி டயஸிடம் வினவியபோது, ஊரடங்கு காலம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் ஊழியர்களை ஈடுபடுத்தி கடற்கரையை விரைவாக துப்புரவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார். (ப)

# அரசியல் கட்சிகளுடனும் பேசி திகதியைத் தீர்மானியுங்கள்!!!

## தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் அஸாத் ஸாலி கோரிக்கை



கொழும்பு, ஜூன் 6

தேர்தலுக்கான திகதியை நிர்ணயிப்பதற்கு முன்னர், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தி, அவர்களின் கருத்துக்களையும் தேர்தல் ஆணைக்குழு பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் முன்னாள் ஆளுநருமான அஸாத் ஸாலி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம், தேர்தலை சுகாதார முறையில் நடத்துவது தொடர்பில் வழிகாட்டியொன்று கையளிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும், தேர்தலில் வாக்காளர்களே வாக்களிக்க வேண்டும். அவர்களின் மன நிலைகளை அவர்கள் சார்ந்த அரசியல் கட்சிகளும், பிரதிநிதிகளும், அரசியல்வாதிகளுமே நன்கறிவர். கட்சிகளின் கருத்துக்களும் கேட்டறியப்பட வேண்டும்.

கொரோனா வைரஸை விட மிகவும் மோசமாக தேர்தல் வைரஸ் உருவெடுத்துள்ளது. ஆளுங்கட்சி ஜூன் 20ஆம் திகதி, எப்படியாவது தேர்தலை நடத்த வேண்டுமென வரிந்து கட்டிக்கொண்டு நின்றது. பெரிய எதிர்பார்ப்புடன் இருந்தது. இது தேர்தல் காலம் அல்ல எனவும் மக்களை கொரோனா வைரஸுக்கு காவுகொடுத்து, பலிக்கடாவாக்க முடியாதெனவும் வெளிப்படையாகத் தெரிவித்தனர்.

ஆளுங்கட்சி அரசியல்வாதிகள், தேர்தல் திணைக்களத்தின் மீதும் அதன் உறுப்பினர்கள் குறிப்பாக, ரட்ணஜீவன் ஹூல் ஆகியோரையும் கண்டபடி திட்டத் தொடங்கினர்.

உயர் நீதிமன்றத்தில் சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழு ஜூன் 20ஆம் திகதி தேர்தலை நடத்தமாட்டோம் என அறிவித்தது. இது அரசுக்கு ஏமாற்றமாகவே அமைந்தது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுவிட வேண்டுமென்ற எண்ணத்திலிருந்த அரசு தற்போதைய நிலையில் சாதாரண பெரும்பான்மையைக் கூட பெற முடியுமா? என்ற ஏக்கத்திலேயே இருக்கின்றது- என்றார். (ப)

# சிறைக் கைதிகளின் முக்கிய உரிமைகள்

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் அறிக்கை வெளியீடு

கொழும்பு, ஜூன் 6

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகளின் உரிமைகள் தொடர்பில் 52 பக்கங்களுடன் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் சிறைச்சாலைக் கட்டமைப்புக்கள் மற்றும் முறைமைகள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று பல ஆண்டுகளாகப் பேசப்பட்டு வருகின்றபோதிலும், அதில் சொற்பளவான முன்னேற்றத்தையே இலங்கை அடைந்துள்ளது.

கொரோனாப் பரவலால் மீண்டும் இந்த விடயம் ஒரு அவசர கவனத்தைத் தோற்றுவித்துள்ளது. நாடளாவிய ரீதியில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகப் பல்வேறு வரையறைகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும், சிறைச்சாலைகளின் நடைமுறைகளில் உள்ள குறைபாடுகள் காரணமாக சிறைக் கைதிகளுக்கும், சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கும் வைரஸ் பரவல் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் நிலை உள்ளமை இனங்காணப்பட்டது.

இந்த அச்சநிலை காரணமாக கடந்த மார்ச் மாதம் அநுராதபுரம் சிறைச்சாலையில் ஏற்பட்ட கிளர்ச்சியில் இருவர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் சிறைச்சாலைகளில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் ஆராய்வதற்கு ஜனாதிபதி ஓர் ஆணைக்குழுவை நியமிப்பதற்குத் தூண்டுதலை ஏற்படுத்தியதுடன், அதனைத் தொடர்ந்து மிகச்சில நடவடிக்கைகள் மாத்திரம் தற்போது எடுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் நடைபெறத்தக்க சட்ட விரோதச் செயற்பாடுகள் குறித்து விசாரணை செய்வதற்கும், அவற்றைத் தடுப்பதற்குமென ஜனாதிபதி செயலணியொன்று நியமிக்கப்பட்டது. இவற்றைக் கருத்தில் கொண்டு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய அறிக்கையைத் தயாரித்திருக்கிறோம், என்றுள்ளது. (க)

# ஆள்கடத்தல் படகில் சிக்கியோரை மீட்கவும்

## கோத்தாபயவுக்கு தகவல் அனுப்பிய உத்தியோகத்தர்கள்

கொழும்பு, ஜூன் 6

இலங்கை சமுத்திரப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 70பேர் அரபிக் கடலில் படகில் சிக்கியுள்ளனர் என்றும், அவர்கள் தம்மை தாய்நாட்டுக்கு அழைத்துவருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்பெய்ன் குழுமத்துக்குச் சொந்தமான, 40 முதல் 50 பேருக்கு சேவை வழங்கக்கூடிய மத்திய தர மீனவர் படகு ஒன்றில் இவர்கள் சிக்கியுள்ளனர். இந்தப் படகில் 180 பேரைத் தடுத்து வைத்து ஆள்கடத்தல் இடம்பெறுவதாகக் கடந்த 2 ஆம் திகதி அவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள தகவலில் குறிப்பிட்டுள்ளனர்.

படகில் உள்ள சமுத்திர பாதுகாப்பு உத்தியோகத்தர்களில் அதிகமானவர்கள், ஓய்வுபெற்ற முப்படை உறுப்பினர்களாவர். சர்வதேச கப்பல் அமைப்பின் நியமங்களுக்கு அமைய தடுத்து வைக்கும் போது, வழங்கப்படும் எவ்வித அடிப்படை வசதிகளும் தமக்கு வழங்கப்படவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர். (ப)

# குண்டுத் தாக்குதல் சூத்திரதாரி மைத்திரியென்றாலும் தண்டனைதான்

## கோத்தா அரசு 'கரார்'

கொழும்பு, ஜூன் 6

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடைய சூத்திரதாரிகள், பொறுப்புக் கூற வேண்டியவர்கள் அனைவருக்கும் உயர்ந்தபட்ச தண்டனை பெற்றுக் கொடுக்கப்படும். ஜனாதிபதியாகப் பதவி வகித்திருந்தாலும்கூட இதில் இருந்து தப்பமுடியாது.

இவ்வாறு ஆளும்கட்சி உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான இந்திக அனுருத்த தெரிவித்தார்.



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடக்கும்போது மைத்திரிபால சிறிசேனவே ஜனாதிபதியாகவும், சட்டம், ஒழுங்கு அமைச்சராகவும், பாதுகாப்பு படைகளின் பிரதானியாகவும் பதவி வகித்தார்.

அப்படியானால் அவர் குற்றவாளி இல்லையா என தொலைக்காட்சி விவாதமொன்றில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் நளின் பண்டார எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே இந்திக மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் துரிதகதியில் இடம்பெற்றுவருகின்றன.

நீதி நிலைநாட்டப்படும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ கத்தோலிக்க மக்களுக்கு உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி பதவி அல்ல எந்தப் பதவி வகித்திருந்தாலும், எந்தக் கட்சியில் இருந்தாலும் தவறிழைத்தவர்களுக்கு உயர்ந்தபட்ச தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும். அதற்காக நாம் முன்நிற்போம். ஜனாதிபதி நிச்சயம் செய்வார் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப-4)

## இந்தியரை அழைத்துச் செல்ல வருகின்றன இரு விமானங்கள்

கொழும்பு, ஜூன் 6

இலங்கையில் நிர்க்கதியாகியுள்ள இந்தியர்களை அழைத்துச் செல்வதற்காக மேலும் இரண்டு இந்திய விமானங்கள் இலங்கைக்கு வரவுள்ளன.

வந்தே பாரத் மிஷன் 3 என்ற திட்டத்தின் கீழ் இந்த விமானங்கள் இலங்கைக்கு வரவுள்ளன.

ஜூன் 15 மற்றும் ஜூன் 22ஆம் திகதிகளில் இந்த விமானங்கள் இலங்கைக்கு வரவுள்ளன. கொழும்பு - பெங்களூர், கொழும்பு- புதுடில்லி - லக்னோவ் விமான ஓடு பாதைகளூடாக இந்த விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. இது குறித்து இந்தியத் தூதரகத்தின் இணையத்தளத்தில் மேலதிக விவரங்கள் பதிவிடப்பட்டுள்ளன. (ப)

## கொரோனாவுக்கு மருந்து கண்டறிய
# இலங்கை - இங்கிலாந்து விஞ்ஞானிகள் கூட்டு முயற்சி

கொழும்பு, ஜூன் 6

**இலங்கை இங்கிலாந்து விஞ்ஞானிகள் மற்றும் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கொவிட் 19 கொரோனா வைரஸை அழிப்பதற்கான மருந்தைக் கண்டறியும் முயற்சியில் ஒன்றிணைந்து பணியாற்றி வருகின்றனர் என்று இலங்கையிலுள்ள இங்கிலாந்து தூதரகம் தெரிவித்துள்ளது.**



கொரோனா வைரஸுக்கான மருந்தைக் கண்டறிவதில் இலங்கையிலும், இங்கிலாந்திலும் உள்ள முன்னணி பல்கலைக்கழகங்கள் முனைப்புடன் ஈடுபட்டுவருகின்றன என்று தூதரகம் தெரிவித்துள்ளது.

மூலக்கூற்று மருத்துவ ஆராய்ச்சிக்கான எம்.ஆர்.சி. வெதரோல் நிறுவனம், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் ஆகியவை வெவ்வேறு நோயாளர்களுக்கு கொவிட் 19 இற்க்கு எதிரான மருந்தைப் பரீட்சித்து ஆய்வை முன்னெடுத்து வருகின்றன. இந்த ஆராய்ச்சி நடவடிக்கைக்கு 10 மில்லியன் ரூபாவை இங்கிலாந்து தனது பங்களிப்பாக வழங்கியுள்ளது.

'கல்வி மற்றும் புத்தாக்கம் உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் இலங்கையும், இங்கிலாந்தும் பல வருடங்களாக ஒன்றிணைந்து பணியாற்றி வருகின்றன. அவ்வாறிருக்கையில் கொவிட் 19 தொற்றுநோய்க்கான பிரதிபலிப்பு மாத்திரம் விதிவிலக்காக இருக்க முடியாது. கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கும், மீண்டும் மற்றொரு வைரஸ் 'பரவல் அலை உருவாவதைத் தடுப்பதற்குமான ஆய்வுகளில் இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமும், இலங்கையின் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகமும் ஒன்றிணைந்து ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. அவர்கள் தமது நீண்டகால இணைப்பு ஆய்வுகளின் மூலமான பெறுபேறுகளை ஆரம்பத்தில் டெங்கு நோய்க்கும், தற்போது கொவிட் 19 இற்கு மருந்துகளைக் கண்டறிவதற்கும் பயன்படுத்தி வருகின்றார்கள்.

இந்த ஆய்வுக்கு நேரடியாக நிதியளிப்பதில் இங்கிலாந்து தூதரகம் பெருமையடைகிறது' என்று இலங்கைக்கான இங்கிலாந்து தூதுவர் சாரா ஹல்டன் தெரிவித்துள்ளார். (க)

## பணம் அச்சடிக்கவில்லை சத்தியம் செய்கிறது அரசு

கொழும்பு, ஜூன் 6

நாட்டின் பொருளாதார நெருக்கடியில் 200 மில்லியன் ரூபா பெறுமதியான புதிய பணம் அச்சடிக்கப்பட்டுள்ளது என்று தவறான கருத்துக்கள் பரப்பப்படுகின்றன. அவ்வாறு நாம் பணத்தை அச்சடிக்கவில்லை. புதிய நாணயம் அச்சடிக்கப்பட்டிருந்தால், மத்திய வங்கியின் புதிய ஆளுநரின் கையொப்பம் இருக்க வேண்டும். அவ்வாறு உள்ளதா என்ற ஆதாரத்தைக் காட்டுங்கள்.

இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

முன்னைய அரசின் காலத்தில் மத்திய வங்கியில் இடம்பெற்ற மிகப்பெரிய கொள்ளையை அடுத்து, வங்கிகள் மீதான நம்பிக்கை இழக்கப்பட்டுவிட்டது. இப்போது எமது அரசில் அதனைச் சரிசெய்து வருகின்றோம். வங்கிகள் மீதான நம்பிக்கைக்கு மத்திய வங்கி பொறுப்பேற்கும் என்று வாக்குறுதிகளை வழங்கியுள்ளனர்.

அதேபோல் அரசு புதிதாக 200 மில்லியன் ரூபாவை அச்சடித்துள்ளதாகக் கூறுவது பொய்யான கருத்தாகும். அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை. நாட்டில் இப்போது பொருளாதார நெருக்கடிகள் உள்ளதை நாமும் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அந்த சுமையை நாம் மக்கள் மீது சுமத்தவில்லை. கொவிட் 19 நெருக்கடியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை வங்கியில் ஆயிரத்து 600 கோடி ரூபாவைப் பெற்றே மக்களுக்கு நிவாரணங்களை வழங்கினோம். நிதி முகாமைத்துவத்தில் மிகவும் கவனமாக நாம் கையாள்கின்றோம். அநாவசிய செலவுகள் அனைத்தையும் நாம் கட்டுப்படுத்தி மக்களுக்கான சேவையை வழங்குகின்றோம்.

இவ்வாறு இருக்கையில் நாம் புதிய பணம் அச்சடித்துள்ளதாகக் கூறுகின்ற கருத்தில் தெளிவான காரணிகள் எதனையும் முன்வைக்கவில்லை. எவ்வாறான பணம் அச்சடிக்கப்பட்டுள்ளது என்பதை கூறவேண்டும், என்றார். (க)

## மாணிக்கக் கல் அகழ்வு: இருவர் கைது

கொழும்பு, ஜூன் 6

மாணிக்கக்கல்லை சட்டவிரோதமாக அகழ முற்பட்ட குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

பொகவந்தலாவ மோர பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 30 மற்றும் 35 வயதுடையவர்கள். அவர்களிடமிருந்து மாணிக்கக்கல் கல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (க)

## கொரோனாக் கால வன்முறை
# பாதிக்கப்பட்ட பெண்களுக்கு கைகொடுக்கின்றது கனடா

கொழும்பு, ஜூன் 6

இலங்கையில் குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு கைகொடுக்க கனேடிய அரசு 4 லட்சம் கனேடிய டொலர் நிதியுதவியை வழங்கியுள்ளது.

கொரோனா பரவலையடுத்து பெண்கள் மீதான குடும்ப வன்முறைகள் அதிகரித்துள்ளன. அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வன்முறைகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடியவாறான சேவைகளைப் பெண்கள் பெற்றுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகளின் குடித்தொகை நிதியம் மேற்கொண்டு வருகின்றது.

இலங்கையில் பெண்கள் மீதான வன்முறைகளைத் தடுத்தல் மற்றும் உரிய பாதுகாப்பு சேவை வழங்கல்களை ஏற்படுத்துதல் என்பவற்றுக்காக ஐக்கிய நாடுகள் குடித்தொகை நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ரிட்சு நக்ஸனிடம், இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மெகினொன் நிதியுதவியை வழங்கினார்.

குடும்ப வன்முறைகள் காரணமாகப் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அவசியமான சிகிச்சைகளை வழங்குவதற்கும், பராமரிப்பதற்குமான வசதிகளை ஏற்படுத்துவதற்கு நிதி செலவிடப்படவுள்ளது.

கர்ப்பிணிகளுக்கான மருத்துவ பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் கொரோனா தொற்றுநோய் காரணமாக பெண்கள் எதிர்கொண்டிருக்கும் சமூக, பொருளாதாரத் தாக்கங்களை ஆராய்தல் என்பவற்றுக்காகவும் இந்த நிதி பயன்படுத்தப்படும்.

'கொரோனா பரவல் காரணமாக ஒட்டுமொத்த நாடும் முடக்கப்பட்டமையால் ஏற்பட்ட பொருளாதார ரீதியான அழுத்தம் ஒருபுறமிருக்க, பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளமை கவலைக்குரிய விடயமாகும். பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய பராமரிப்பை வழங்குவதற்கான நடவடிக்கைகளில் இலங்கைக்கு உதவத் தயாராக இருக்கிறோம்' என்று நிதியுதவி தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள கனேடியத் தூதுவர் டேவிட் மெக்கினொன் தெரிவித்துள்ளார். (க)



## மகனைக் கண்டுபிடிக்காமலே தேடிய தந்தை உயிரிழப்பு!!!

வவுனியா, ஜூன் 6

தனது மகனைத் தேடிப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த தந்தையொருவர் நேற்று வெள்ளிக்கிழமை காலை உயிரிழந்தார்.

வவுனியா கூமாங்குளத்தைச் சேர்ந்த சின்னச்சாமி நல்லதம்பி (வயது -71) என்பவர், தனது வீட்டில் உள்ள மரமொன்றில் ஏறியபோது தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் தொடர் போராட்டத்தில் பங்குபற்றி வந்தார்.

இவரது மகன் கடந்த 2008 ஆம் ஆண்டு வவுனியா நீதிமன்றுக்கு முன்பாக வைத்து இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வந்த இவர் 1200 ஆவது நாளன்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்திலும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-110)

# ஆபத்தை விலை கொடுத்து வாங்க கோத்தா அரசு முடிவு

## பி.சி.ஆர். சோதனை முடிவுகளை பொறுத்தே தனிமைப்படுத்தலாம்!!

கொழும்பு, ஜூன் 6

**வெளிநாடுகளிலிருந்து வருவோரை சிரமத்துக்குள்ளாக்குவதை தவிர்ப்பதற்காகவும் அவர்கள் எல்லோரையும் தனிமைப்படுத்துவதை தவிர்ப்பதற்காகவும் கோத்தாபய அரசு ஆபத்தான தீர்மானத்தை எடுத்துள்ளது.**

நாட்டுக்கு வருவோரை விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தி அதன் முடிவுகளைப் பொறுத்து தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

கொரோனாத் தொற்று ஒருவருக்கு ஆரம்ப நிலையில் இருந்தால், பி.சி.ஆர். பரிசோதனையில் அதனைக் கண்டறியமுடியாது. எனவே தொற்று ஆரம்ப நிலையில் உள்ள ஒருவர் விமான நிலையம் ஊடாக வரும்போது சோதனைக்கு உட்படுத்தப்பட்டால் கொரோனா தொற்று இல்லை என்ற பரிசோதனை முடிவையே பெறுவார். அவர் சமூகத்தில் உலாவித் திரியும் போது, கொரோனாத் தொற்று ஆரம்ப நிலையிலிருந்து அடுத்த கட்டத்துக்கு நகர்ந்திருக்கும். அவர் ஊடாக ஏனையோருக்கும் தொற்றுப் பரவ வாய்ப்புள்ளது. எனவே அரசின் இந்த யோசனை ஆபத்தானது என்று மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கொவிட் 19 ஒழிப்பு விசேட செயலணி மற்றும் விசேட மருத்துவ நிபுணர்களுடன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அந்தக் கலந்துரையாடல் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வெளிநாடுகளிலிருந்து குறிப்பாக மத்திய கிழக்கில் இருந்து நாட்டுக்கு வருவோரை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தும்போதும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும்போதும் முகம்கொடுக்க வேண்டியுள்ள பிரச்சினைகள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிகள் குறித்து கலந்துரையாடலின் போது விரிவாக ஆராயப்பட்டது.

வெளிநாடுகளிலிருந்து வருவோரின் பி.சி.ஆர். முடிவுகளின் பின் தனிமைப்படுத்தவும், பி.சி.ஆர். முடிவுகளைப் பெற்றுக்கொள்வதை விரைவுபடுத்துவதற்கு விமான நிலைய வளாகத்திலேயே பரிசோதனைக் கூடமொன்றை நிறுவுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

நோய்த்தொற்று நீண்ட காலம் இருக்க முடியும் என்பதாலும் அதனைத் தொடர்ந்தும் விமான நிலைய வளாகத்தில் பரிசோதனைக்கூடமொன்று இருப்பதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வெளிநாடுகளில் இருந்து வருகை தருவோரை குறித்த நாடுகளிலேயே பரிசோதனைக்கு உட்படுத்துதல், அதனை அரசின் நேரடித் தலையீட்டில் அல்லது குறித்த நாடுகளின் பங்களிப்புடன் மேற்கொள்ளக்கூடிய வாய்ப்புகளை கண்டறியவும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு முன்கூட்டியே நோய்த் தொற்றுடையவர்களைக் கண்டறிவதன் மூலம் மருத்துவமனைகளுக்கு அனுப்பும் போதும் தனிமைப்படுத்தலின் போதும் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளை குறைக்க முடியும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். (ப)



# சோதனைக்கு மறுப்போரை திருப்பி அனுப்புவோம்

*எச்சரிக்கிறது இலங்கை*

கொழும்பு, ஜூன் 6

வெளிநாடுகளிலிருந்து வருவோர் பி.சி.ஆர். சோதனைக்கு மறுப்புத் தெரிவித்தால் மீண்டும் அவர்களது நாட்டுக்கே திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதான தொற்றுநோய் மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் இராஜதந்திர அதிகாரி ஒருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனையை நிராகரித்து நாட்டுக்குள் பிரவேசித்துள்ளார்.

இராஜதந்திர சிறப்புரிமையின் கீழ் பரிசோதனையை மேற்கொள்ளாது அவர் அங்கிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டதாக விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே பிரதான தொற்றுநோய் மருத்துவ நிபுணர் மேற்கண்டவாறு தெரிவித்தார். நாட்டுக்கு வரும் அனைவரும் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். அதற்கு மறுப்புத் தெரிவித்தால் நாட்டுக்குள் பிரவேசிக்க எவருக்கும் அனுமதி வழங்கப்படாது- என்றார். (ப)

# இராஜதந்திரச் சிறப்புரிமைக்கு அமையவே சோதனை விலக்கு

*அமெ. தூதரகப் பேச்சாளர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 6

அமெரிக்க இராஜதந்திரிகளின் இலங்கைக்கான வருகை, இராஜதந்திர உறவுகள் தொடர்பான வியன்னா மாநாட்டில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்கவே பி.சி.ஆர். சோதனையை அமெரிக்க இராஜதந்திரி மறுத்துள்ளார் என்று இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் பி.சி.ஆர். சோதனைக்கு உட்பட மறுத்தார் என்ற தகவலில் உண்மையில்லை என்று சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

பி.சி.ஆர். பரிசோதனையை நிராகரித்து நாட்டுக்குள் பிரவேசித்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன. அமெரிக்க இராஜதந்திரிகளின் இலங்கைக்கான வருகை, இராஜதந்திர உறவுகள் தொடர்பான வியன்னா மாநாட்டில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்கவே அவர் சோதனையை மறுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவரும் முன்னாள் வடக்கு மாகாண ஆளுநருமான மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்ததாவது:

இராஜதந்திரிகளுக்கான பி.சி.ஆர். சோதனைகள் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகள் உறுதியாகத் தெரியாததால், அமெரிக்க இராஜதந்திரி கட்டுநாயக்க விமானத் தளத்துக்கு வந்த பின்னர் அங்குள்ள அதிகாரிகளால் விமான நிலையத்திலேயே தங்கி இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். அவர் பல மணிநேரம் விமான நிலையத்தில் தங்கியிருந்துள்ளார். இராஜதந்திரியுடன் கையாளும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறை குறித்து விமான நிலைய அதிகாரிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டனர். இந்த நிலையில் தமக்கு பி.சி.ஆர். சோதனை தேவையில்லை என்று கூறி ஓர் ஆவணத்தை அமெரிக்க இராஜதந்திரி இலங்கை அதிகாரிகளிடம் வழங்கியுள்ளார். அதன் பின்னரே சோதனைக்கு மறுத்துள்ளார், என்றார்.

இது தொர்பில் அமெரிக்கத் தூதரக செய்தித் தொடர்பாளர் தெரிவித்ததாவது:

அமெரிக்க இராஜதந்திரிகளின் இலங்கைக்கான வருகை, இராஜதந்திர உறவுகள் தொடர்பான வியன்னா மாநாட்டில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்கவே அவர் அந்த ஆவணத்தைக் காட்டினார் என்றும், இது இலங்கை மற்றும் பிற நாடுகளின் இராஜதந்திரிகள் அமெரிக்காவுக்கு வருவதற்கும் பொருந்தும், எனவும் தெரிவித்தார். (ப)

# மணல் அகழ்வை தடுத்து நிறுத்தவும்

*உதயபுரம் மக்கள் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜூன் 6

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/89 கிராம அலுவலர் பிரிவு உதயபுரம் கிராமத்தில் தனியார் காணிகளில் நீண்ட காலமாக சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாகவும் அதனை தடுத்து நிறுத்துவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். ஊரடங்கு நடைமுறையிலுள்ள நேரத்திலும் சுதந்திரமான முறையில் மணலகழ்வு இடம்பெறுகின்றது என்று அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறையிட்டும் தமக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த நிலை நீடித்தால் கடல்நீர் கிராமத்துக்குள் புகும்நிலை ஏற்படும். எனவே உரிய தரப்பினர் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உதயபுரம் பகுதி மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (கு-111)

# வீடுகளில் நகைகள் திருட்டு: முன்னாள் பொலிஸ் அதிகாரி கைது

கொழும்பு, ஜூன் 6

இரண்டு வீடுகளில் தங்க நகைகளை திருடிய குற்றச்சாட்டில் முன்னாள் பொலிஸ் அதிகாரி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொல்கஹவெல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் கடந்த பெப்ரவரி மாதம் பனலிய மற்றும் பொல்கஹவெல ஆகிய பிரதேசங்களிலுள்ள இரு வீடுகளுக்குள் நுழைந்து தங்க நகைகளைத் திருடியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

திருடப்பட்டுள்ள நகைகளின் பெறுமதி சுமார் 2 இலட்சம் ரூபா என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். திருடப்பட்ட நகைகள் தொடர்பில் பொலிஸார் தற்போது விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். சந்தேகநபர் ஏற்கனவே குற்றமொன்று தொடர்பில் பணிநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரி. (க)



# மின் பட்டியலில் கட்டணக்கழிவு

மே மாத மின்சாரப் பட்டியலில் கட்டணக்கழிவு உள்ளடக்கப்பட்டு வழங்கப்படும் என்று மின்சார சபை அறிவித்துள்ளது.

ஏப்ரல் மாதத்தில் மின் கட்டணப் பட்டியல் அதிக ரிக்கப்பட்டிருந்தமையால் பாவனையாளர்கள் நெருக்கடிக்கு முகம் கொடுத்ததாக விசனம் வெளியிடப்பட்டிருந்தது. இந்த நிலையில், இந்த மாதம் பாவனையாளர்களுக்கு இலங்கை மின்சார சபை நிவாரணம் வழங்கவுள்ளது. இம்மாதம் வழங்கப்படும் மின் பட்டியலில் கட்டணக் கழிப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# வாக்குறுதிகளைக் கைவிட்டால் அரசை வீட்டுக்கு அனுப்புவோம்

## சஜித் பிரேமதாச ஆவேசம்

கொழும்பு, ஜூன் 6

**மக்களுக்கு சலுகைகளைப் பெற்றுக் கொடுக்காமல் அரசு இருக்குமாயின் எதிர்வரும் பொதுத்தேர்தலில் இந்த மக்களின் ஆசீர்வாதத்துடன் வெற்றி பெற்று தற்போதைய அரசை தோல்வியடையச் செய் வோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**

அவரது இல்லத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய அரசுக்கு கடந்த நவம்பர் மாத காலப்பகுதியில் இந்த நாட்டு மக்கள் மீது அதிகமான அக்கறை இருந்தது. இந்த அக்கறை கடந்துள்ள இந்த ஏழு மாதகாலத்தில் இருப்பதாகத் தெரியவில்லை.

கொரோனாப் பரவல் காரணமாக மக்கள் நெருக்கடிகளை எதிர் நோக்கி வருகின்ற நிலையில் அரசு அவர்களுக்காக எந்தவித சலுகைகளையும் பெற்றுக் கொடுப்பதாகத் தெரியவில்லை.

அரசுக்கு தற்போது நாட்டு மக்களை விட கடற்கரையோர வேலைத்திட்டங்கள், புதிய பாதைகள் அமைத்தல், நெடுஞ்சாலைகள் அமைக்கும் வேலைத்திட்டம், கிரிக்கெட் அரங்குகள் போன்றனவே முக்கியமான விடயங்களாக இருக்கின்றன.

தங்களுக்கு காசு கிடைக்கக் கூடிய செயற்பாடுகள் தொடர்பிலே ஆளும் தரப்பினர் ஆர்வமாக இருக் கின்றனர். இன்று நாட்டு மக்கள் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒழுங்கான வருமானம் இன்றி, உணவுத் தட்டுபாட்டுக்கு மத்தியில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் போஷாக்குக்காக அரசால் வழங்கப்பட்டு வந்த திரிபோஷா தயாரிப்பு தடுத்து வைக்கப்பட்டுள்ளது. திரிபோஷாவைத் தயாரிப்பதற்குத் தேவையான பொருள்கள் இல்லை என்று திரிபோஷா உற்பத்தித் தொழிற் சாலை மூடப்பட்டுள்ளது.

அரசின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் வெறுப்புற்று இருக்கின்றனர். தொடர்ந்தும் தங்களது பைகளை நிரப்பிக் கொள்வது தொடர்பிலே சிந்தித்துக் கொண்டிருக்காமல் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசு நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் நாட்டு மக்களின் ஆசிர்வாதத் துடன் எதிர்வரும் பொதுத்தேர்தலை நாங்கள் வெற்றி கொண்டு தற்போதைய அரசை வீட்டுக்கு அனுப்புவோம்- என்றார். (ப)

# சிவசிதம்பரத்தின் 18ஆவது நினைவு

தமிழ்த் தலைவர்களில் ஒருவரும் நல்லூர் உடுப்பிட்டித் தொகுதிகளின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் உப சபாநாயகருமான அமரர் மு. சிவசிதம்பரத்தின் 18ஆவது நினைவு தின அஞ்சலி நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நெல்லியடி பஸ் நிலைய சதுக்கத்தில் உள்ள அன்னாரின் சிலையடியில் நடைபெற உள்ளது.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தலை வர் எஸ். பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அர சியல்வாதிகள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்துவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-173)

விற்பனைக்கு

மிளகு கன்று, கொழும்பு வெற்றிலை மற்றும் பல இனக் கன்றுகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-077 612 9343
நியுலங்கா பாம்
பலாலி றோட் ஊரெழு மேற்கு
கணேசா பாடசாலைக்கு அருகாமை

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையம் K.K.S துறைமுகம் என்பவற்றிற்கு 1K.m தூரத்திற்குள் 8,10,13, 17,18 பரப்பு காணிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 076 172 4033

# குருதிக் கொடை முகாம்



யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்ப்பாணம் கே.கே.பி. இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் தற்போதைய குருதித் தேவையைக் கருத்தில் கொண்டு நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள லொயலாஸ் மண்டபத்தில் குருதிக்கொடை முகாம் நடத்தப்படவுள்ளது. குருதிக்கொடை முகாமில் ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்ற முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அன்றைய தினம் ஊரடங்கு நடைமுறையில் வரும் சந்தர்ப்பத்தில் குருதிக்கொடையாளர்கள் குருதி வங்கி பதிவுப்புத்தகத்தை வீதி பாஸ் அனுமதியாகப் பயன்படுத்த முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

தூர இடங்களைச் சேர்ந்த குருதிக்கொடையாளர்கள் 0776616484 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு போக்குவரத்து வசதியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-159)

மீண்டும் PPT EXPRESS
இரவு/ பகல் போக்குவரத்துச் சேவை மற்றும் பார்சல் சேவையும்

Colombo <> Jaffna
Jaffna <> Colombo

இருவழிப்பாதைக்கான சேவைகள் ஊழியர்களின் நன்மை கருதியும், அவசர தேவைகளுக்காக செல்பவர்களின் நன்மை கருதியும், இரவு வேளைகளில் மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளது.



திகதி : 06.06.2020
நேரம் : 08.30 pm

உங்கள் ஆசனப்பதிவுகளை மேற்கொள்ள:

Hotline:
Jaffna : 076 440 8947
077 573 1318
Colombo : 076 440 8951
077 575 5175

24 hr Booking service

சந்தைப்படுத்தும் முகவர்கள் தேவை

PASYALE SINCE 1958

60 வருட காலமாக இலங்கை மக்களின் நம்பிக்கையை வென்ற பஸ்ஸாலே ஆயுர்வேத மருந்தக தனியார் நிறுவனம். ஆயுர்வேத மருந்துகளை தயாரிக்கும் துறையில் முன்னணி நிறுவனமாகும். மற்றும் அதன் தயாரிப்புக்களை சந்தைப் படுத்துவதற்கு தகுதிவாய்ந்த சந்தைப்படுத்தும் முகவர்களை யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா ஆகிய பிரதேசங்களுக்கு தேவைப்படுகின்றனர்.

வேண்டப்படும் தகைமை:-

1. வங்கி உத்தரவாதம் பெற்றுக்கொடுத்தல்.
2. பொருள் சந்தைப்படுத்துவதற்காக லொறி வாகனம் இருத்தல் (10 1/2 அடி).
3. களஞ்சிய அறை வசதி.
4. சாரதி அல்லது தான் அத்தகுதியை கொண்டிருத்தல்.
5. சந்தைப்படுத்தும் முகவராக அனுபவம் இருத்தல் விஷேட தகைமையாக கருதப்படும்.

உங்களிடம் மேற்குறிப்பிட்ட தகுதிகள் இருப்பின். அதற்கான விருப்பம் உங்களுக்கு இருந்தால் உங்களுடைய விண்ணப்பத்தை கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு கடிதம் மூலமாக அல்லது மின்னஞ்சல் மூலமாக அனுப்பிவையுங்கள்.

நிர்வாக முகாமையாளர்
வ/ப பஸ்ஸால ஆயுர்வேத மருந்தகம் (தனியார்) நிறுவனம்
இல.321/3, தழுபிடிய வீதி, மஹர,
கடவத்த.
Mobile: 077 232 6863
pasyalaayurveda_product@yahoo.com
sales@pasyalaayurveda.com


# தமிழ் அரசு கட்சியின் யாழ். கிளை கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளைக்குழு கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது. தற்போதைய நிலையில், ஞாயிற்றுக்கிழமை ஊரடங்கு உத்தரவு குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. ஞாயிற்றுக்கிழமை ஊரடங்கு உத்தரவு இல்லாதபட்சத்தில், கூட்டத்தினை ஞாயிறன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ.5)

## மரண அறிவித்தல்

### மயிலு இராமநாதன் (இரத்தினம்)



தோற்றம் 11.07.1953 மறைவு 04.06.2020

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மயிலு இராமநாதன் கடந்த (04.06.2020) வியாழக்கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (07.06.2020) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கட்டை ஆலடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மிசன் பாடசாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு.

தகவல்:-
இரத்தினராஜ் (மகன்)

## மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 11 . 1945 மறைவு 04 . 06 . 2020

### கணபதி இரத்தினம்

மல்லாகத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி இரத்தினம் கடந்த (04.06.2020) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - பூரணம் தம்பதியினரின் அன்பு மகனும், துளசியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் மங்களாசினி (சுவிஸ்), கயந்தன் (சுவிஸ்), தயாளினி, சயிந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கரன் (சுவிஸ்), விஜயகுமார் (சுவிஸ்), தர்மினி (சுவிஸ்), சுதர்சன் ஆகியோரின் பாசமிகு மாமனும் சீதுலன், நிலனா, டிலக்ஷனா, கிருபரன், யேறிசன், கரிஸ்சன், யது, கஜனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (07.06.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:- 077 8445 923

### குப்பைக்கு...

யில் நடந்துள்ளது.

வீட்டுக் காணியைத் துப்புரவாக்கி, குப்பைகளுக்குத் தீ வைத்தபோது, காற்றால் அந்தத் தீ பறந்து அயல்வீட்டு தென்னை, பனை மரங்களில் பரவியது. தீயைக் கட்டுப் படுத்த முடியாதநிலையில், தீயணைப்புப் பிரிவினருக் குத் தகவல் வழங்கப்பட்டது.

தீயணைப்புப் பிரிவினர் சம்பவ இடத்துக்குச் சென்று தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அவர்களுக்கு அந்தப் பகுதி மக்களும் உதவி செய்த னர். தீயால் பயன்தரு மரங்கள் எரிந்து நாசமாகியுள் ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-156)

### துப்பாக்கி...

ளார்.நேற்று மொனராகலை, இந்தேகட்டுவ பகுதியில் பொலிஸாருக்கும், சந்தேகநபருக் கும் இடையே நடந்த துப்பாக்கிச் சூட்டில் சந்தேகநபர் காயமடைந்தார். அவர் பலத்த பாதுகாப்புடன் மொனரா கலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார்.


சந்தேகநபர் பொலிஸாரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோ கம் மேற்கொண்டார் என்றும், பொலிஸார் பதிலுக்கு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அவர் காயமடைந்தார் என் றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஸ்.பி.ஜாலிய சேன ரத்ன தெரிவித்தார்.

சந்தேகநபரிடம் இருந்து கத்தி ஒன்றும், கையெறி குண்டு ஒன்றும், துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு சுப்பிரமணியம்

(Tractor மணியம்)



யாழ்ப்பாணம் வதிரி கொற்றா வத்தையை பிறப்பிடமாகவும் வதிரி நத்திவளவினை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சுப்பிரமணியம் (Tractor மணியம்) நேற்று (05.06.2020) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.


அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு தெய்வானை தம்பதியரின் மகனும், சுப்பிரமணியம் தவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னையா, பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், சி.விஷ்வலிங்கம், த.சரோஜினி (அமரர்) ஆகியோரின் மைத்துனரும், கமலவாணி (டென்மார்க்), கலைச் செல்வி (கனடா), ஜெயவதனி (இங்கிலாந்து), தவச்செல்வம், ஜெயதர்சினி (பெறாமகள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரபாகரன் (டென்மார்க்), நித்தியானந்தன் (கனடா), பாலேந் திரன் (இங்கிலாந்து), துஷ்யந்தன், இமையாள் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சாதனா (டென்மார்க்), கவிதரன் (டென் மார்க்), லவன் (கனடா), சாமினி (கனடா), நிவேதிகா (இங்கி லாந்து), சுகந்தன் (இங்கிலாந்து), ஜெனனிக்கா, கபிலாஷ், அதர்ஷனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.06.2020) ஞாயிற் றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

021 226 4880,
0777 315051 (மகன்)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 17.03.1939 மறைவு 05.06.2020

### மயிலு சிவானந்தன்

(ஓய்வு நிலை ஆசிரியர், யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, சமாதான நீதவான்)

அல்வாய் மூன்றாம் பனையடியைப் பிறப்பிட மாகவும், அல்வாய் செல்வமஹாலை வசிப்பிட மாகவும் கொண்ட மயிலு சிவா னந்தன் (ஓய்வு நிலை ஆசிரியர், யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, சமாதான நீதவான்) நேற்று (05.06.2020) வெள்ளிக்கிழமை இறை பதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயிலு - சின்னத்தங்கம் தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான மகேசு - செல்லம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - இரா சம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் மற்றும் செல்வமலரின் அன்புக் கணவரும், உதயகுமார் (கனடா), திருமதி விஜிதா புஸ்பநாதன் (ஆசிரியை, வ/தமிழ் ம.ம.வித்தியாலயம்), திருமதி மஞ்சுதா மோகன் (ஆசிரியை, வ/அரபா வித்தியாலயம்), திருமதி சுகிர்தா விநோதரன் (ஆசிரியை, கொ/நுகேகொட த.ம.வித்தியாலயம்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி சுகுணா உதயகுமார் (கனடா), கலாநிதி அ.புஸ்ப நாதன் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாகம்), திரு.த.மோகன் (அதிபர், வ/நித்தியநகர் லோகேஸ்வரா வித்தியாலயம்), திரு. க.விநோதரன் (கணக்காளர், Sparehubs International, Colombo), ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மோ.வர் ஷன், மோ.சிவாம்ஷன் (வ/தமிழ் ம.ம.வித்தியாலயம்), வி.கவிஷனன் (கொ/பம்பலப்பிட்டி இ.கல்லூரி), வி.சிவலக் ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (05.06.2020) வெள்ளிக் கிழமை பிற்பகல் 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 6527894
077 9777818
011 647 9739465
0770217611

தகவல்:
குடும்பத்தினர்.

### இந்தியாவிலிருந்து...

ருக்கு இருவர் வந்திருந்த நிலையில், அவர்களை அழைத்து வந்தமை மற்றும் உதவி வழங்கியமை என் னும் சந்தேகத்தில் 6 பேர் புலனாய்வுத் துறை அதிகாரி களால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

சில நாள்களுக்கு முன்னர் கடல் வழியா கச் சட்டவிரோதமாக தலைமன்னாருக்கு வந்த இருவர், மடு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர். அவர்கள் கடந்த செவ் வாய்க்கிழமை மட்டக்களப்பு புனானை தனிமைப்படுத்தும் நிலையத்துக்கு அனுப்பப்பட்டனர்.

அவர்களை அழைத்து வர உதவி செய்த னர் என்ற சந்தேகத்தில் போசாலை மற் றும் வங்காலைப் பகுதியைச் சேர்ந்த 6 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ள னர். இந்தியாவில் இருந்து இருவரை அழைத்துவரப் பயன்படுத்தப்பட்டது என்று நம்பப்படும் படகு, படகு வெளியி ணைப்பு இயந்திரம் என்பவை துள்ளுக் குடியிருப்புக் கடற்கரையில் பொலிஸா ரால் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-56)

### இராணுவ...

என்று கூறியுள்ளார் ராஜபக்ஷ அரசின் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல.

'எதிரணியினர் தங்கள் சுயலாப அரசிய லுக்காக இராணுவத்தைக் கொச்சைப்ப டுத்துவது வேதனைக்குரியது' எனவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

பாதுகாப்பான நாடு, ஒழுக்கமான, நீதி யான, சட்டத்தை மதிக்கும் சமூகம் என்ப வற்றைக் கட்டியெழுப்புவதற்கான ஜனா திபதி செயலணியை ஜனாதிபதி உருவாக் கியுள்ளார். அதில் முந்நாள், இந்நாள் முப்படை மற்றும் பொலிஸ் அதிகாரி களை மாத்திரம் உள்ளடக்கிய 13 பேரை ஜனாதிபதி நியமித்துள்ளார். அதற்கு எதி ராக ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர். ஜனா திபதி கோத்தாபய ராஜபக்ஷவின் இரா ணுவ ஆட்சிக்கு இது சிறந்த எடுத்துக் காட்டு எனவும் அவர்கள் சாடியுள்ளனர். இது தொடர்பில் அரசின் நிலைப்பாட்டைத் தெரிவிக்கும்போதே அதன் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு மக்களின் அமோக வாக்குகளால் கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். அவரின் செயற் பாடுகள் நாட்டின் பாதுகாப்புக் கருதியும், மக்களின் பாதுகாப்பு கருதியும் நீதியின் வழியில் முன்னெடுக்கப்படுகின்றன. வீழ்ந்துபோன எதிரணியினர், அரசிய லில் முகவரி தேடுவதற்காக எமது அரசை விமர்சிக்கின்றார்கள். எதிரணியினரின் இந்தக் கருத்துக்களுக்குப் பொதுத் தேர் தலில் நாட்டு மக்கள் உரிய பதிலை வழங் குவார்கள். அப்போதுதான் உண்மை தெரியவரும் - என்றார். (ஒ.5.22)

# பத்து சைக்கிள்கள் மீட்பு திருடினரென இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்ப்பாண புறநகர்ப் பகுதிகளில் சைக்கிள்களைத் திருடி வந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 10 துவிச்சக்கர வண்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாண நகர வீதியில் துவிச்சக்கரவண்டி ஒன்றில் பயணித்துக்கொண்டு மற்றொரு துவிச்சக்கர வண்டியை கொண்டுசென்ற இளைஞனில் சந்தேகம்கொண்ட யாழ்ப்பாண பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவைச் சேர்ந்த சிவில் பொலிஸார், அவரை விசாரித்தனர். சந்தேகநபர், கொட்டடிப் பகுதியிலுள்ள இடமொன்றை அடையாளம் காட்டியுள்ளார். அங்கு மேலும் 9சைக்கிள்கள் காணப்பட்டன. அவை திருடப்பட்டவை என்பது தெரியவந்ததால் அவற்றை பொலிஸார் மீட்டனர். அந்த சந்தேகநபருடன் மற்றொருவரும் கைதுசெய்யப்பட்டார்.

அவர்கள் இருவரும் அரியாலை, சுண்டுக்குளி, குருநகர் உட்பட யாழ்ப்பாண மாநகரின் புறநகர் பகுதிகளில் சைக்கிள்களைத் திருடி வந்துள்ளனர் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக் குக் கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் சைக்கிள் களை அடையாளம் காணும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் யாழ்ப்பாண நீதிவானிடம் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (கு-26)

## மரண அறிவித்தல்

தோற்றம் 12.01.1962 | மறைவு 05.06.2020



### திருமதி இரகுராதா நிர்மலாவதி

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், தற்போது பிரான்ஸில் வசித்தவருமான திருமதி இரகுராதா நிர்மலாவதி நேற்று (05.06.2020) வெள்ளிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம்-பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசதுரை சின்னம்மா தம்பதியரின் மருமகளும், இரகுராதாவின் பாசமிகு மனைவியும், வினோதா (பிரான்ஸ்), தர்சன் (பிரான்ஸ்), கனிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நவரத்தினராசா, பத்மாவதி, ஸ்ரீஸ்கந்தராசா, சற்குணராசா, இரத்திரராசா, அனுசியாவதி (வதனா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுபிர்தன், அக்ஷயா ஆகியோரின் பேர்த்தியாரும், பிரவீணாவின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**076 4714528 (கணவர்)**
**0033664861378 (மகன்)**

தகவல்:
**குடும்பத்தினர்**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### தேவமனோகரி சிவராமச்சந்திரன்

மண்ணில் 28.01.1958 | விண்ணில் 30.05.2018

அன்புத் திருமகளாய்
குடும்பத்தின் குலவிளக்காய்
அறிவின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
வாழ்வின் வழிகாட்டியாய்
எம்மை வழி நடத்திய அன்னையே
நீர் எம்மை விட்டு பிரிந்து
இரு ஆண்டுகள் கடந்தினும்
அகன்றிடுமோ எங்கள் துயர்
வாழும் காலம் வரை தொடர்ந்திடுமோ
உங்கள் நினைவு
என்றும் எங்கள் இதயத்தில்
குடியிருக்கும் உங்கள் ஆத்மா சாந்தி
பெறப் பிரார்த்திக்கும்.

பெரியரசடி வீதி,
சாவகச்சேரி

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 06 . 1944 | மறைவு 02 . 06 . 2020



### பொன்னுத்துரை தெய்வானைப்பிள்ளை

பலாலியைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தென்மூலையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை தெய்வானைப்பிள்ளை கடந்த **(02.06.2020)** செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆச்சிப்பிள்ளை, செல்லம் மற்றும் தங்கம்மா, ராசம்மா, செல்லையா ஆகியோரின் அன்பு சகோதரியும் யோகராசா, முருகராசா, தேவராசா, ஜெயக்குமார் (லண்டன்), சுபாசினி (பிரான்ஸ்), சேனாதிராசா (லண்டன்), சுகந்தினிதேவி, மனோகராசா (லண்டன்), சுகந்தாதேவி (லண்டன்), தீலிப்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சாந்தினி, யோகராணி, காலஞ்சென்ற மனோரம்மா, ஜெயந்தா, தவராசா, மங்களமதி, கனகராசா, அனுரா, முருகேஸ்வரன், ரம்யா ஆகியோரின் அன்பு மாமியாரும் றஜிந்தன், நிறோஜா, நர்மதா, நிறைஞ்சினி, லக்சன், லக்சிகா, லபேசன், சுரேகா, டர்சிகா, அஜின், கிசாந்தன், கிருசாந்தன், லகீனா, பிரசாந், சஜீபன், சஜீதா, சதுஸ்கா, சபிதன், டசானா, சகானா, யக்ஷிகா, தேஷிகன், அஸ்வீன், வாகிஷா, வர்ஷா, பவிஷ் ஆகியோரின் செல்லப்பேர்த்தியும் தேனுஜாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(07.06.2020)** ஞாயிற்றுக்கிழமை முற்பகல் **11.00** மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று அவரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக பலாலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சங்கானை வீதி,**
**அச்சுவேலி.**

தகவல்:
**குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு:- 077 200 2426, 077 159 5314**

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 09 . 1933 | மறைவு 05 . 06 . 2020



### Dr. வைரமுத்து வல்லிபுரம்

அல்வாய் பூமாஞ்சோலையைப் பிறப்பிடமாகவும், இங்கினியாகலை புசல்லாவ, குளியாப்பிட்டிய, ரண்ண, தெனியாய மல்லவ ஆகிய இடங்களில் வசித்தவரும், தற்போது றொபேட் குணவர்த்தன மாவத்தை 12/5, 1/1 றொபேட் ரெரஸ் கிருலப்பனையை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட Dr.வைரமுத்து வல்லிபுரம் நேற்று (05.06.2020) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வைரமுத்து-முத்து தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற யோகாம்பிகையின் அன்புக் கணவரும், திருமதி Dr.தேன்மொழி, வசந்தன், வத்சலா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரபாரதி, Dr.சபேசன், சாந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தரேந், காஸ்வி, திதிக்ஷா, விவிற்ஷா, காருண், ஓவியா, கவின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2020) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3.30 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கிருலப்பனை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்டும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**றொபேட் குணவர்த்தன மாவத்தை,**
**12/5, 1/1, றொபேட் ரெரஸ்,**
**கிருலப்பனை,**
**011 251 3802, 0777 062005,**
**0777 062 009, 077 691 2401**

தகவல் :
**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மனம் மகிழ
13 . 07 . 1969



நெஞ்சம் நெகிழ
20 . 05 . 2019

### அமரர் யோகலிங்கம் கேதீஸ்வரன்

(B.Sc, PGDE, M.Sc, SLTS 1 ஆசிரியர்,
யா/ வியாவில் சைவவித்தியாலயம், காரைநகர்)

**திதி: 06.06.2020**

காலம் ஒன்று மறைந்தாலும்
கவலைகள் மறையாது
ஞாலத்தில் நீங்கள் மறைந்தாலும்
உங்கள் ஞாபகங்கள் மறையாது
பார்வையில் நீங்கள் மறைந்தாலும்
உங்கள் பாசங்கள் மறையாது
ஆயிரம் உறவுகள் வந்தாலும்
ஆறும் வழியாமறியோம்
பாங்காக வார்த்தை சொல்ல
பஞ்சாகப் பறந்து வாங்கோ அப்பா
பாவிகள் நாம் இங்கு
பரிதவித்து நிற்கின்றோம்.


உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வெங்கடேஸ்வரர் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

வேம்படி, காரைநகர். குடும்பத்தினர்.

---

## 60 வது பிறந்தநாள் நினைவலையும் 09 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்

தோற்றம்
24 . 05 . 1960



மறைவு
18 . 05 . 2011

### அமரர் இராமநாதன் லோகநாதன்

(முன்னாள் செயலாளர் பிரதேச சபை)

திதி : அபரபக்க பிரதமை (06.06.2020)



வருடங்கள் ஒன்பது அஸ்தமித்தும்
அலையாய் மோதும் உங்கள் ஞாபகங்கள்
அலறித் தவிக்குது என் இதயம்
நிலையில்லா மனம் கொண்டு எனை
நிர்கதியாக்கி நீங்கள் தந்த வேதனை தாழாது
நிற்கின்றேன் நிலைகுலைந்து
ஓய்வு எடுத்துவிட்டு எத்தனை கற்பனைகள்
அத்தனையும் கரைந்தது ஏனோ!
*ஓம் சாந்தி.*

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழும்
அன்பு மனைவி லோ.ரதீஸ்வரி

---

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம்
29 . 11 . 1934



மறைவு
04 . 06 . 2020

கலாபூஷணம் அருட்கலைத்திலகம்

### வரதராஜா மாணிக்கவேல்

(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட வரதராஜா மாணிக்கவேல் கடந்த (04.06.2020) வியாழக் கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வரதராஜா நாகம்மா தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான முருகேசு இரத்தினம் தம்பதியரின் மருமகனும், மகேஷ்வரியின் அன்புக் கணவரும், வசந்தன் (அவுஸ்திரேலியா), லலித குமார் (கனடா), தயானந்தன் (ஜேர்மனி), கேசவன், சந்திரிக்கா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராஜீவலோஜனா, விஜிதா, சிறிவதனி, சுபாசினி, ரவிக்குமார் ஆகியோரின் மாமனாரும், சம்யுதா, டிரன், அனுஜா, ஆதிரா, அனுருத், மணிரெங்கன், கரிஸ்ராகுல், ஸ்நிதிகா, சம்ரிதி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (05.06.2020) வெள்ளிக்கிமை 1010/09, K.K.S. வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுகொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்.

தொ.பேசி:077 8155124

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
12 . 11 . 1962



மறைவு
06 . 05 . 2020

### திருமதி சகுந்தலாதேவி (நீலா) திருநாவுக்கரசு

கடந்த (06.05.2020) புதன்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் திருமதி சகுந்தலாதேவி திருநாவுக்கரசு அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (05.06.2020) வெள்ளிக்கிழமை காலை 06 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது.

வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (07.06.2020) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நெடுங்கேணி வளவு, அச்செழு, நீர்வேலி. குடும்பத்தினர்




# ட்ரம்பின் அணுகுமுறை சர்ச்சைகள் மிக்கவை!!

### மெர்க்கல் தெரிவிப்பு

லண்டன், ஜூன் 6
அமெரிக்காவில் ஜோர்ஜ் புளொய்ட் என்ற கறுப்பினத்தவரின் இறப்பு பெரும் கலவரத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், 'இந்த விவகாரத்தில் ட்ரம்பின் நகர்வு சர்ச்சை மிக்கது' என்று தெரிவித்துள்ளார் ஜேர்மனியின் அதிபர் மெர்க்கல்.

ஜோர்ஜ் புளொய்டின் கொலை மிகவும் கொடுமையானது. நிறவெறி என்பது கொடுமையானது. 'அமெரிக்க அதிபர்களின் அரசியல் அணுகுமுறை சர்ச்சையான ஒன்று. ட்ரம்புடையதும்தான் என்று மெர்க்கல் மேலும் தெரிவித்தார். (ம)



# பயணத் தடையை நீக்கியது இத்தாலி

உரோம், ஜூன் 6
இத்தாலியில் கொரோனாப் பரவல் கட்டுப்படுத்தப்பட்டதை அடுத்து அங்கு பயணத் தடையை நீக்கியது இத்தாலி அரசு.

இதுகுறித்து இத்தாலி பிரதமர் ஜிசப்பே கான்டே தெரிவித்ததாவது: 'கொரோனா தொற்றால் புதிதாக பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து வருகிறது. கொரோனாவைத் தடுப்பதில் இத்தாலி சரியான பாதையில் உள்ளது. மே மாதம் 4ஆம் தேதி முதல் நாங்கள் உற்பத்தி மற்றும் கட்டுமானத் துறைகளை மீண்டும் திறந்தபோது அது எங்களை பொருளாதார ரீதியாக ஊக்கமளித்தது. இந்த நிலையில் இன்று (நேற்று) முதல் ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள் இத்தாலிக்கு வருகை தரலாம். அவர்கள் தனிமைப்படுத்தப்படமாட்டார்கள். தேசிய அளவிலும் பயணத் தடை நீக்கப்பட்டுள்ளது' என்றார். (ம)

# மக்களைப் பிரித்தாளும் தலைவர்தான் ட்ரம்ப்!!

## முன்னாள் இராணுவத் தளபதி மேட்டிஸ் இவ்வாறு தாக்குதல்

வொஷிங்டன், ஜூன் 6
**மக்களைப் பிரித்தாளும் தலைவரை அதிபர் ட்ரம்பின் வடிவத்தில் பார்க்கின்றேன். ஆளுமையற்ற தலைமைத்துவத்தின் கீழ் நாம் இருக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார் அமெரிக்காவின் முன்னாள் இராணுவத் தளபதி மேட்டிஸ்.**



அமெரிக்காவில் ஜோர்ஜ் புளொய்ட் என்ற கறுப்பினத்தவர் உயிரிழந்தமைக்கு அங்கு கண்டனங்களும் போராட்டங்களும் வலுத்து வருகின்றன. இந்தப் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவராமல் மெத்தனப்போக்குடன் ட்ரம்ப் செயற்படுகின்றார் என்று அவருக்குப் பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் கண்டனங்கள் குவிகின்றன. இந்த நிலையிலேயே மேட்டிஸும் ட்ரம்பைக் கண்டித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: அமெரிக்க மக்களை ஒன்றிணைக்காமல் தோல்வியடைந்த, என் வாழ்க்கையில் நான் சந்தித்த முதல் அதிபர் டொனால்ட் ட்ரம்ப்தான்.

மக்களை ஒன்றிணைப்பதற்கான முயற்சிபோல் பாசாங்குகூட செய்யவில்லை ட்ரம்ப். மாறாக மக்களைப் பிரிக்க அவரே முயற்சிக்கிறார்.

இவரது இத்தகைய 3 ஆண்டுகால விளைவுகளைத்தான் இப்போது பார்க்கிறோம். 3 ஆண்டுகளாக ஒரு முதிர்ச்சியற்ற தலைமையின் செயல்களைப் பார்த்து வருகிறோம். அவர் இல்லாமலேயே நாம் ஒற்றுமையுடன் இருப்போம், நம் சிவில் சமூகத்தின் வலுவான தன்மையினால் நாம் ஒற்றுமையுடன் இருப்போம்'- என்றார். (ம)



# எல்லையை திறக்கிறது ஸ்பெய்ன்!

மட்ரிட், ஜூன் 6
ஐரோப்பானில் கொரோனா கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதை அடுத்து தனது எல்லைகளைத் திறக்க ஸ்பெய்ன் அரசு முடிவெடுத்துள்ளது.

பிரான்ஸ் மற்றும் போர்த்துக்கலுடன் தனது தரைவழி எல்லையைப் பகிர்கின்றது ஸ்பெய்ன்.

இந்த எல்லைகள் ஜூன் 22ஆம் திகதி முதல் திறக்கப்படும் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# சீனாவின் விமானங்களுக்கு தடைவிதித்த அமெரிக்காவின் முடிவு வருத்தம் தருகிறது

### சீன வெளிவிவகார அமைச்சு அறிக்கை

பீஜிங், ஜூன் 6
சீன விமானங்களுக்குத் தடைவிதித்த அமெரிக்காவின் முடிவு வருத்தம் தருகின்றது என்று தெரிவித்துள்ளது சீனாவின் வெளியுறவுத்துறை.

அந்த அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

"அமெரிக்காவின் நடவடிக்கை எங்களுக்கு வருத்தம் அளிக்கிறது. எனக்குத் தெரிந்தவரை, சீனாவின் விமானப் போக்குவரத்துத் துறை நிர்வாகிகள் அமெரிக்கத் தரப்புடன் பேச்சு நடத்தி வருகிறார்கள்.

போக்குவரத்தைத் தொடர்வதற்காக விமான போக்குவரத்துத் துறை அமெரிக்காவுடன் மிகவும் நெருக்கமான தொடர்பில் இருந்து வருகிறது. சீனா கொள்கைகளை மாற்றிக் கொள்வதாக அறிவித்துள்ளது. அமெரிக்கா பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான இருதரப்பு முயற்சிகளுக்கு தடைகளை உருவாக்காது என நம்புகிறோம்" என்றுள்ளது. (ம)

**ஐஸ்கிறீம், யோக்கட் மற்றும் தயிர் பதனிடும்**
**பணியாட்கள்/ மேற்பார்வையாளர்கள்**
**உடனடியாக வேலைக்கு தேவைப்படுகின்றனர்**

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, தேராவில்லில் அமைந்துள்ள எமது பாற்பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைக்கு ஐஸ்கிறீம், யோக்கட் மற்றும் தயிர் பதனிடும் பணிக்கு நன்கு அனுபவமுள்ள **பணியாட்கள், மேற்பார்வையாளர்கள்** உடனடியாக தேவைப்படுகின்றனர். **சம்பளம் அனுபவத்தின் அடிப்படையில் பேசித்தீர்மானிக்கப்படும்.**

**தங்குமிட வசதி செய்து தரப்படும்.**

**விண்ணப்பங்களை info@yugashakthi.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.**

**மின்னஞ்சல் வசதி அற்றவர்கள் 011 272 3650/ 450 என்ற இலக்கத்திற்கு வாரநாட்களில் காலை 8.30 - மாலை 5.00 மணிக்குள் தொடர்பு கொள்ளவும்.**



அமெரிக்காவில் பொலிஸ் சித்திரவதையால் உயிரிழந்த கறுப்பினத்த வரான ஜோர்ஜ் புளொய்ட் என்ற கறுப்பினத்தவருக்கான அஞ்சலி நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் அங்கு இடம்பெற்றன. பலநூறு மக்கள் அணி திரண்டு அவருக்கு தமது அஞ்சலியைச் செலுத்தினர். (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.